

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 15ம் நாள் நிறைமதி (29-06-2026 திங்கட்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா - ஆனி ௨௧ ஆம் நாள் (05-07-2026)


சோமசுந்தரநாயகர்
மறைமலைஅடிகள்
அழகர் அடிகள்
ஆடலரசு ஐயா
சீர்வளர்சீர். ஞானவொளி அடிகளார்
தமிழ்ச்சைவ ஞானத்திருமடம்
பீடம் இவரும் பெருவிழா அழைப்பு
கவுந்தப்பாடி, ஈரோடு மாவட்டம்.






**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# அடையாளத்தினை விட்டுக்கொடுப்பதற்கு பெயர் பெருந்தன்மை அல்ல

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

எமது அடையாளம் என்பது மொழி, சமயம், உணவு, உடை, சடங்குகள் மற்றும் பழக்கவழக்கங்கள் என்று பல கூறுகளைக் கொண்டது. இதில் குறிப்பாக சமயம் என்பதை எடுத்துக் கொண்டால், சமயத்திற்கு ஏதாவது இடையூறுகள் வந்தால் உடனே கூறுவது அதனை கடவுள் பார்த்துக் கொள்வார், சிவன் பார்த்துக் கொள்வார், எல்லாம் அவன் செயல், சமத்துவம் பேணவேண்டும், விட்டுக் கொடுக்கப் பழக வேண்டும், பெருந்தன்மையை பேணவேண்டும், முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று பல தத்துவங்களை பேசுபவர்கள், தமது குடும்பத்தில், சமூகத்தில், கிராமத்தில், அலுவலகத்தில், ஏன் தானே இதனை பின்பற்றுபவர்களா என்று நாம் பார்க்க வேண்டும். கருத்துக்கள் கூறுவது யாரும் இலகுவாக செய்யலாம் அதன்படி தாங்கள் வாழ்கிறார்களா என்று சுய பரிசோதனை செய்ய வேண்டும்.

நாங்கள் எல்லா மதங்களையும் மதிக்க வேண்டும், அவரவர் பண்பாடுகளை மதிக்க வேண்டும் அதில் எந்தவித மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. அதுபோல் எங்கள் சமயத்தினை நாங்கள் போற்றுவது, அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது, அது தொடர்பாகப் பேசுவது எந்தக் காலத்திலும் தவறாகாது. இது ஒருபோதும் மதவெறுப்பாகாது. மற்ற மதத்தினரும் இதனைப் பின்பற்று கிறார்கள்.

சில மதக்குழுவினர் திட்டமிட்டு கட்டாய மதமாற்றங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்த மதமாற்றுக் குழுவினர் பெரும் பாலானோர் வெளிநாட்டு நிதியுதவியுடன், இந்த மதமாற்று நடவடிக்கைகளை செய்துவருகின்றனர். இது நிச்சயமாக ஒரு பண்பாட்டு அழிப்பு என்பதனை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் சுயமாக ஒரு மாதத்தில் இருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவது அவரது தனிப்பட்ட மற்றும் அடிப்படை உரிமை. ஆனால் பொருளாதார உதவிகள் , மற்ற மதங்களைக் கீழ்த்தரமாக பேசி தங்கள் மதமே சிறந்தது என்று பொய்யுரைத்து, சமூக பொருளாதார வேறுபாடுகள் போன்றவற்றை வைத்து மதமாற்றம் செய்தல் போன்றவை கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர் - போற்றித் திருவகவல்**

இலங்கையின் சிங்கள இடங்களில் எப்படி அவர்கள் தமது மதத்தினை, மொழியினை போற்றி வாழ்கின்றனர் என்பதை நாம் பார்த்து பழகவேண்டும். இன்றும் பல பண்பாட்டுப் பழக்கவழக் கங்களை இன்றும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். உதாரணமாக வெற்றிலை வைத்து வரவேற்பது என பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம். துறவு என்ற பாதையில் பலர் தாமாகவே முன்வந்து தமது மதத்தினை மேலோங்க செய்கின்றனர். எந்தவொரு பாடசாலையோ, அரச நிறுவனமோ, பொது இடங்களோ புத்தபெருமானின் திருவுருவச்சிலை இல்லாமல் இருக்காது.

ஆனால் தமிழர் வாழ்கின்ற இடங்களில் இதில் ஏதாவது ஒன்றை செய்வதற்கு முதல் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் தமிழர்களே. எல்லோரும் கருத்துச் சொல்லலாம் என்பதற்காக, தம்மைப் பெருந்தன்மையானவர் என்ற பொய் வேடத்தில் தாமே நிறுத்தி கருத்துக்களைச் சொல்கிறோம் என்ற போர்வையில் எங்கள் பண்பாட்டுக் கூறுகளை அழித்து வருகின்றனர். ஏதாவது ஒரு பொது இடத்தில் ஒரு சிவன் சிலையை வைக்கலாமா என்று சிந்தித்து பாருங்கள்? நம்மவரே விடமாட்டார்கள். தன் அடையாளத்தில் பற்றில்லாதவன் மற்றவர் அடையாளத்தில் அக்கறை உள்ளவனாக ஒருபோதும் ஆகமாட்டான். வெறும் வாய்ச்சொல் மட்டுமே. அடையாளத்தினை விட்டுக்கொடுப்பதற்கு பெயர் பெருந்தன்மை இல்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். அனைவரையும் மதிப்போம் அத்துடன் எம்மையும் காப்போம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(30-05-2026) – தென்னாட்டின் எழுபதாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300, விடை நல்லோரை, வைகாசித் திங்கள் 16 ஆம் நாள் (30-05-2026 – சனிக்கிழமை) வைகாசி நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சத்திர சிகிச்சைத் துறைப் பேராசிரியர். சிற்றம்பலம் இராஜேந்திரா ஐயா அவர்கள் மற்றும் வேணி களஞ்சியத்தின் உரிமையாளர் சிவத்திரு. கங்கைவேணியன் ஐயா ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். தென்னாடு சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களும் இந்நாளில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

நிகழ்வில், தென்னாடு சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சத்திர சிகிச்சைத் துறைப் பேராசிரியர். சிற்றம்பலம் இராஜேந்திரா ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபதாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பேராசிரியர். சிற்றம்பலம் இராஜேந்திரா ஐயா அவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றிருந்தது. மேனாள் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள் பொன்னாடையை போர்த்தி இக்கௌரவிப்பை செய்திருந்தார். தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(02-06-2026) – சம்பந்தர் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (04-06-2026) – திருவாவடுதுறை ஆதீனம், திருவிடைமருதூர் கட்டளை விசாரணை சீர்வளர்சீர் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள் தென்னாட்டில் எழுந்தருளினார்கள்.

திருக்கயிலாய பரம்பரை, மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின் வண்ணம், திருவாவடுதுறை ஆதீனச் சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மைய இலங்கை கிளைகளுக்கான தொடக்க விழாவிற்காக வருகை தந்திருந்த சீர்வளர்சீர் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள் கடந்த 04-06-2026 அன்று, தென்னாட்டிற்கு எழுந்தருளி, ஐம்பூதநாதரிடத்தில் வழிபாடாற்றினார்கள்.

மேலும் தென்னாடு கோசாலை, மயில்வளாகம், நூலகம், திருமுறை சன்னதி என்பவற்றை பார்வையிட்டதுடன், மடத்தில் தங்கியிருந்து அன்று மாலை, நடைபெற்றிருந்த **‘சைவசித்தாந்தரத்தினம்’** பட்டக் கற்கைநெறி மாணவர்கள் உடனான சந்திப்பில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி, அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அருளாசிகளையும் வழங்கி இருந்தார். இவர்களுடன் திருவாவடுதுறை சைவத்திரு முறை நேர்முகப் பயிற்சி மைய இயக்குநர் சிவத்திரு. சபா சண்முகசுந்தரம்ஐயா ஆகியோரும் இணைந்திருந்தனர்.

(06-06-2026) – அமரர். விமலாதேவி நித்தியானந்தம் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (16-06-2026) – அமரர். உமாராணி பத்மநாதன் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (20-06-2026) – மாணிக்கவாசகர் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (23-06-2026) – அருளம்பலம் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் அவர்களின் பூட்டியார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். (27-06-2026) – ஆனித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

***திருச்சிற்றம்பலம்***

# சைவத் திருக்கோயில்கள் மற்றும் சைவ நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கான சட்ட வழிகாட்டல் கருத்தரங்கு



சைவத் திருக்கோயில்களின் சீரான நிர்வாகம், சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் சமய நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையுடனான சட்ட அடிப்படையிலான பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் நோக்கில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மாவட்டங்களை மையப்படுத்திய **'இந்து ஆலயங்கள் குறித்து சட்டம் என்ன சொல்கிறது?'** என்ற தொனிப்பொருளிலான சட்ட விளக்கக் கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சிவத்திரு. ய.அநிருத்தனன் அவர்களின் ஆலோசனையின் கீழும், அந்தந்த மாவட்டச் செயலாளர்களின் வழிகாட்டலிலும் இக்கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. இத்தொடர் கருத்தரங்குகளில் பிரபல மூத்த சட்டத்தரணி **க.வே. ஸ்ரீ கணேஷராஜன்** அவர்கள் பிரதான வளவாளராகக் கலந்துகொண்டு, சைவத் திருக்கோயில்கள் மற்றும் சமய நிறுவனங்களின் நிர்வாகம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்ட முன்வரைவினை மையப்படுத்தி விரிவான சட்ட விளக்கங்களை வழங்கி வருகின்றார்.

வவுனியா, திருகோணமலை, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அண்மையில் மிக சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ள இக்கருத்தரங்குகளில், புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தால் கோயில் நிர்வாகத்தில் ஏற்படும் மாற்றங்கள், நன்மைகள் மற்றும் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளின் பங்களிப்போடு, கோயில்களின் நிர்வாக முறைகள், அறங்காவலர் நியமனத்திற்கான தகுதிகள், திருக்கோயில்களின் சட்ட அடிப்படையிலான யாப்பினை உருவாக்குதல், சொத்துக்கள் பதிவு மற்றும் பாதுகாப்பு, புதிய சட்ட முன்வரைவின் முக்கிய அம்சங்கள் போன்ற விடயங்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, திருக்கோயில் முரண்பாடுகள், கணக்கு வழக்குகள், அறநெறிப் பாடசாலைக் கண்காணிப்பு மற்றும் நீண்டகாலமாக இயங்காதிருந்த கோயில்களின் ஒன்றியங்களை மீள இயக்குவது குறித்தும் ஆராயப்பட்டு ஏகமனதாகத் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

புதிய சட்டத்தின் மூலம் கோயில் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை அதிகரிப்பதோடு, சமய நிறுவனங்களின் பொறுப்புநிலை வலுப்பெற்று சமூகத்தின் நம்பிக்கை மேலோங்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நான்கு மாவட்டங்களில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ள இச்சட்ட விளக்கக் கருத்தரங்குகள், தொடர்ந்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், ஏனைய வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் மிக விரைவில் நடத்தப்படவுள்ளன. இக்கருத்தரங்குகள் இலங்கைச் சைவத் திருக்கோயில்களின் தூய்மையான, சட்ட அடிப்படியிலான நிர்வாகக் கட்டமைப்பிற்கு ஒரு புதிய வழிகாட்டியாக அமையும் என அடியார்கள் பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**



# ஓதுவார் 'பத்மஸ்ரீ' திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்களுக்கு தென்னாட்டில் கௌரவிப்பு!



தமிழிசை மரபையும் பன்னிரு திருமுறையையும் தன் மூச்சாகக் கொண்டு, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னலம் கருதாது இறைவனுக்குத் திருமுறைப் பண்ணிசையால் இசையாராதனை செய்துவரும் தமிழகத்தின் மூத்த **ஓதுவாமூர்த்தி திருத்தணி ந. சுவாமிநாதன்** அவர்களுக்கு, கொக்குவில் 'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில்' விசேட கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரில் பிறந்த 81 வயதான சுவாமிநாதன் ஐயா அவர்கள், தருமபுர ஆதீனத் தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தேவாரம் கற்பித்து வருபவர். திருத்தணி முருகன் கோயிலில் ஓதுவாராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னும், 274 தேவாரத் திருத்தலங்களிலும் திருமுறைப் பாடல்களைப் பாடி பத்தி நெறியைப் பரப்பி வரும் இவருக்கு, ஓதுவார் வரலாற்றிலேயே முதன்முறையாக இந்திய அரசின் உயரிய **'பத்மஸ்ரீ'** விருது கடந்த 27.05.2026 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் வைத்து வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதனை **"திருமுறைக்குக் கிடைத்த மகுடம்"** என உலகளாவிய சைவப் பெரியோர்கள் போற்றி மகிழ்ந்துள்ளனர். மேலும், இவர் 2025 ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற விழாவில் **"மாமன்னன் இராசராசர் விருது"** பெற்றவர் என்பதும் பெருமைக்குரியது. மேலும் தென்னாடு ஊடகத்தின் **"அடியாரைத் தேடி"** நேர்காணல் வழியாக ஐயாவின் ஆன்மீக அனுபவங்களால் அடியார் பெருமைகளை உலகறியச் செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெரும் பேறு பெற்ற சான்றோர் ஈழத்து மண்ணில் கால் பதித்துள்ள வேளையில், யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை ஐம்பூதநாதர் திருக்கோயிலில் இவருக்குப் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆனித் திங்கள் 15 ஆம் நாள் (29-06-2026) திங்கட்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஐயா அவர்களுக்கான கௌரவிப்புடன், தென்னாடு சிவமடத்தின் **'ஆனித் திங்கள் இதழ்'** (இதழ் – 71) வெளியீட்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருச்சிற்றம்பலம் மௌன மடம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள், யாழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன், சிவத்திரு. சிவஞானசுந்தரம் தம்பு, யாழ்விஷன் இந்துமன்ற முதல்வர் சிவத்திரு. கந்தையா சுசீந்திரன், சிவத்திரு. சண்முகராஜா சண்முகநாதன் மற்றும் யாழ் பல்கலைக்கழக இசைத்துறை மூத்த விரிவுரையாளர் ஓதுவார் கலாநிதி நவரட்ணம் பரந்தாமன் உள்ளிட்ட பல ஆன்மீக, கல்விப் பெருந்தகைகளும் அடியார் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

தமிழியலின் தொன்மையையும் திருமுறைப் பண்ணிசையையும் உலகெங்கும் பறைசாற்றி வரும் பத்மஸ்ரீ சுவாமிநாதன் ஐயா அவர்களை நேரில் கண்டு, பாராட்டி, ஆசி பெற்றுக்கொள்ளுமாறு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் அடியார் பெருமக்களை அன்போடு அழைத்துள்ளது.


**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**


# திருவாவடுதுறை ஆதீனத் திருவிடைமருதூர் கட்டளை விசாரணை சீர்வளர்சீர் திருச்சிற்றம்பலம் தம்பிரான் சுவாமிகள் தென்னாட்டில் எழுந்தருளல்











# சீர்வளர்சீர். ஞானவொளி அடிகளார் தமிழ்ச்சைவ ஞானத்திருமடத்தின் பீடம் ஏறும் பெருவிழா

தமிழ்நாட்டில் சமயத் துறைகளிலும், திருக்கோயில்களிலும் வாழ்வியல் சடங்குகளிலும் வடமொழி ஆதிக்கமே இருந்து வந்த காலத்தில், இவற்றை மாற்ற வேண்டும் என்ற சென்ற நூற்றாண்டில் கருதியவர் சைவசித்தாந்த சண்டமாருதம் சூளை சோமசுந்தர நாயகரின் மாணாக்கர் ஆகிய **அருட்திரு. மறைமலை அடிகள்** ஆவார். இவர் தமிழ், ஆங்கிலம், சமக்கிருதம் என்னும் வடமொழிகளாகிய மும்மொழிகளிலும் நிறைந்த புலமை பெற்றவர். சைவ சமயத்திலும், தனித் தமிழிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். வடமொழி கலப்பு இல்லாத தூய தமிழில் வழிபாட்டு முறைகளை வடிவமைத்து அதனைத் தாமும் பின்பற்றி, மக்களுக்கும் உணர்த்தினார். தாம் நாளும் வழிபாடு செய்து வந்த அம்பலவாணர் சிவகாமி அம்மை, மணிவாசகர் ஐம்பொன் திருமேனிக்கு திருக்குட நன்னீராட்டு விழா, தன் மகளின் திருமணம், மனைவியின் திருவடிப்பேறு வழிபாடுகளை தமிழில் திருமுறைப் பதிகங்களை ஓதிச்செய்து எடுத்துக்காட்டாக விளங்கித் தம் அன்பர்களை ஆற்றுப்படுத்தினார்.

மறைமலை அடிகளின் மாணாக்கர் இளவழகனார் என்னும் **சிவத்திரு. அழகரடிகள்** ஆவார். சங்க இலக்கியம், திருமுறைகள், சைவ சித்தாந்த நூல்களில் ஆழ்ந்த புலமை உடையவர். திருக்குறள் நூலை நன்கினிது பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் திருக்குறளுக்கு என ஓர் பீடம் அமைத்தும். தமிழ் வழிபாடு. வாழ்வியல் சடங்குகளை அடிகளின் வழிநின்று, தன் வாழ்நாள் காலம் வரை செய்து வைத்தும், தமிழ் வழி திருமுறைகள் ஓதி தீக்கைகள் செய்தும் ஊக்குவித்தும் வாழ்ந்தவர்.

சிவத்திரு. அழகரடிகளின் தலை மாணாக்கர் சிவத்திரு. **ஒளியகம் ந.ரா.ஆடலரசு** ஆவார், அவர் மறைமலை அடிகள் மற்றும் அழகர் அடிகளுடன் 1938 களில் இருந்தே அணுக்கமாக இருந்தவர். அவ் இருபெரும் குரவர்களின் வழிநின்று தமிழுக்கும் சைவத்திற்கு பல தொண்டுகளைப் பலவாறு செய்து வந்தார். பல நூறு மாணாக்கர்களுக்கு தமிழில் தீக்கைகள் செய்வதையும், வாழ்வியல் நிகழ்ச்சிகள், கோயில் வழிபாடு, குடமுழுக்குகளையும் தமிழில் செய்து வந்தார். இவற்றின் தொடர்ச்சியாக தமிழ்ச் சைவ ஞானத் திருமடம் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் எண்ணினார். ஆனால் அவர் காலத்தில் நிறைவேறவில்லை.

மேற்குறிப்பிட்ட இருபெரும் குரவர்களான சிவத்திரு. அழகர் அடிகளிடம் சமய, விசேட தீக்கைகள் பெற்று, ஒளியகம் ந.ரா. ஆடலரசு ஐயாவிடம் நிர்வாணம் மற்றும் ஆசாரியம் பெற்றவர் **'சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார்'** என்னும் **ஒளியகம் ந.ஒளியரசு** ஐயா ஆவார். அவர் கடந்த 25 ஆண்டுகளாக தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூர், மொரிசியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான மாணாக்கர்களுக்கு தீக்கைகள் செய்தும், 35 ஆண்டுகளாக தமிழில் திருமணம் முதலிய வாழ்வியல் நிகழ்வுகள், கோயில் வழிபாடு, குடமுழுக்குகளைச் செய்தும் வருகின்றார், தன் தந்தையாகவும் குருநாதராகவும் வாய்த்த சிவத்திரு. ஒளியகம் ந.ரா.ஆடலரசு ஐயா அவர்களின் எண்ணத்தைத் தன் காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற சீர்வளர்சீர் ஞானவொளி அடிகளார் ஒளியகம் ந.ஒளியரசு ஐயா அவர்களின் திண்ணிய எண்ணத்தை அறிந்து, ஐயா அவர்களிடன் தீக்கைப் பெற்ற மாணவர்கள் முயன்று குருவருளால் ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்தரும் நீள்நெடுங்கண்ணி அம்மை உடனமர் அருள்மிகு அண்டம் முழுதுடையாரின் பெருங்கருணையாலும் அக்கோயில் தென்புறத்தில் கோயிலை ஒட்டி ஓர் இடம் அமைந்தது. அவ்விடத்தில் **'தமிழ்ச்சைவ ஞானத் திருமடம்'** என்ற பெயரில் திருமடத்திற்கான கட்டிடப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2057, ஆடித்திங்கள் 3 ஆம் நாள் (19.07.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 09.00 - 10.30 மணியளவில் தமிழ்ச்சைவ ஞானத் திருமடத்தில் சீர்வளர்சீர். ஞானவொளி அடிகளார் பீடம் இவரும் பெருவிழா நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு ஞாலம் அளந்த மேன்மைத் தமிழில் தெய்வ ஒண்தீந் தமிழ்த் திருமுறைகள் ஓதி வேள்வி வழிபாடுகளுடன் நடைபெற உள்ளது. இவ்விழாவில் குருமகாசந்நிதானங்களும், சான்றோர் பெருமக்களும், கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இவ்விழாவிற்கு அன்பர் பெருமக்கள் அனைவரும் கலந்து குருவருளும் திருவருளும் பெற வேண்டுகிறோம்.

மேலும் தமிழ்ச் சைவ ஞானத் திருமடம் பீடம் இவரும் பெருவிழாவானது சிறப்புற நடைபெற்று, சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்திட எல்லாம்வல்ல அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை ஐம்பூதநாதப் பெருமானிடத்தில் விண்ணப்பமும் வைத்து மகிழ்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈழத்து சித்தர்கள்

# கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

(12) சார்சன் (சார்ஜன்) சுவாமிகள் – இவரது சமாதி கோம்பயன் மயானத்தில் உள்ளது. கடையிற் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர். பெரியகடைப்பகுதியில் கடையிற் சுவாமிகள் உலாவித்திரியும் போது மனநோயாளி என்று எண்ணி காவல்துறை அவரை அங்கொடைக்கு கொண்டு செல்வதற்காக ஒரு நாள் யாழ்ப்பாண சிறையில் அடைத்தார்கள். மறுநாளை காலை அவரை சிறை அறையில் காணவில்லை. அவர் வழமை போல பெரியகடைப்பகுதியில் உலாவித் திரிந்தார். இந்நிகழ்வு அங்கு சார்சனாக பணியாற்றிய சின்னத்தம்பியின் மனநிலையில் மாற்றத்தை உண்டாக்கியது. இச்சின்னத்தம்பியே சார்சன் சுவாமிகள் ஆவார்.

(13) காசிச்சுவாமிகள், கற்கண்டுச்சாமியார் எனும் இருவர் கடையிற் சுவாமிகளின் அடியராக இருந்ததாக இல்லறஞானி இராமச்சந்திரனார் கூறியதாக ஆத்மஜோதி முத்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பெரிய கடைச்சுவாமியின் அடியார்கள் என மதிக்கப்பட்ட காசிச் சுவாமி, கற்கண்டுச்சுவாமி ஆகிய இருவரின் ஆசிகளைத் தான் மூன்றாவது வயதில் பெற்றதை எடுத்துச் சொல்லுவதாக அக்கட்டுரையில் தொடர்கின்றது. மேலும் உசன் மடம் சம்பந்தமான ஆத்மஜோதி இதழில் காசியடிகள் என்று ஒருவரைக் குறிப்பிட்டுள்ளனர். அவர் தான் காசிச்சுவாமிகளோ என்று அறிய முடியாதுள்ளது. மேலும் உசன் இராசேஸ்வரி அம்மன் தற்போது ஆலடி முருகன் என்று அழைக்கப்படும் இடத்தில் இவரது சமாதி இருப்பதாக கூறப்படுகின்றது. உறுதியாக கூறமுடியாதுள்ளது. ஒட்டுவெளி முருகன் கோயிலிற்கு பின்னே காசிப்பிள்ளை என்ற சுவாமிகளின் சமாதி உள்ளது.

(14) கடைச்சாமியம்மாள் – இவர் தான் பொன்னம்மாள் அம்மையாரோ என்ற சந்தேகம் உள்ளது. இவரைப் பற்றிய குறிப்புகள் இல்லாவிடினும் கடையிற் சுவாமிகளுடன் தொடர்பு இருக்கலாம் என அறிய முடிகின்றது. ஆனால் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இவரது திருவுருவப்படம் இணுவில் ஞானலிங்கேச்சரர் கோயிலில் உள்ளது.

(15) ஓட்டுமடம் பொன்னப்பா சுவாமிகளின் தாயார்– இவர் கடையிற் சுவாமிகளின் அடியாராக இருந்தார் என்று ஆத்மஜோதி இதழில் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்



கூறியுள்ளார்.

(16) கைதடி ஆறுமுகம் எனும் அடியார் – யாழ்ப்பாணம் பெரிய கடையிற் சுவாமிகளின் அருளாசி பெற்ற கைதடி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் தீர்த்த மடமும் தீர்த்தக்கிணறும் அமைக்கும் திருப்பணியைச் செய்தார். இத்தீர்த்த மடச்சுவரில் கடையிற் சுவாமிகளிடம் சுவாமிகளின் அருளாசி பெறும் படமொன்று தீட்டப்பெற்றிருந்தது. இப்போது அது இல்லை. திருவருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வரலாறு 2002 இந்நூலில் இத்தகவல் உள்ளது.

(17) யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி – இவரது சமாதி சிறி வில்லிபுத்தூரில் (தமிழ்நாடு) உள்ளது. இவர் குழந்தைவேற் சுவாமிகளில் சீடர் என்று கூறப்பட்டாலும் கடையிற் சுவாமிகள் சமாதி வைக்கும் போது அவரால் ஞான நிலைக்கு உட்பட்டவர். அதை பின்வரும் நிகழ்வு கூறுகின்றது. யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி நூலில் கலாநிதி க. குணராசா பின்வருமாறு கூறுகின்றார்.

அருள் நிறைவாக நீராவியடியில் சமாதி கூடும்

காலத்தில் தியானத்தில் அமர்ந்தார். கால்களை மடக்கி இரு கைகளையும் தியானக் கோலவடிவில் மடியில் வைத்தவாறு சமாதியாகியிருந்தார். நிலத்தில் அவர் எதுவிதமான ஆதாரமுமின்றி அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி இறைத்தன்மையான ஒளி கவிந்திருப்பதாக ஆறுமுகத்திற்குப் பட்டது. 'சுவாமி' என்றழைத்தவாறு எல்லாரும் அவர் முன் பணிந்தனர். ஆறுமுகம் அப்படியே சாட்டாங்கமாக அவர் முன் விழுந்தார்.

சமாதிக்குரிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சமாதி வைபவத்தினை குழந்தைவேற்சுவாமி ஆற்றினார். ஆறடி ஆழத்தில் நான்கடி அகலச் சதுரக் குழி ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. செங்கற்கள், உப்பு மற்றும் வாசனைத் திரவியங்கள் அதன் அருகில் குவிக்கப்பட்டிருந்தன. கடையிற்சுவாமியை அவர் அமர்ந்த நிலையிலேயே வாசனைத் திரவியங்களால் அர்ச்சித்து தீபதூபங்காட்டி குழிக்குள் தூக்கி இறக்கி அமர்த்தினார்கள். அருகிலிருந்த பொருட்களால் குழியை நிரப்பினார்கள். 'அவரது சமாதி நிலைச் சரீரத்தைத் தூக்கிக் குழிக்குள் இறக்கியபோது என்னைத் தூக்கி அதற்குள் இறக்குவது போன்ற பிரமை ஏற்பட்டது. அப்பிரமை என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது' பிற்காலத்தில் ஆறுமுகம் தன் மூத்தமகன் அருளம்பலத்திடம் அந்த அனுபவத்தினை எடுத்துரைத்துள்ளார்."

(18) முத்தர்மோன் என்றழைக்கப்பட்ட குமாரவேலு – மண்டைதீவின் தெற்கே வசித்துவந்த முத்தர் என அழைக்கப்பட்ட முத்துத்தம்பி என்னும் பெரியார் தனது காணியிலே ஐயனார் கோயிலை அமைத்து வணங்கி வந்தார். இவர் இறந்த பின் இவரது மகன் குமாரவேலு என்பவர் இக்கோவிலைப் பராமரித்துவந்தார். இவரை முத்தர்மோன் என்று மக்கள் அழைப்பார்கள்.

ஆன்மீக ஈடுபாட்டின் காரணமாக இவர் துறவு நிலையை மேற்கொண்டவராகக் காணப்பட்டார். கடையிற் சுவாமிகள் இங்கு வந்து ஏனைய துறவியருடன் சேர்ந்து கொண்டார். கடையிற்சுவாமிகள் இந்த இடத்திலே ஓர் அற்புதத்தை நிகழ்த்திக் காண்பித்தார். முத்தர்மோனை அழைத்து தன் முன்பு இருக்கும்படி பணித்தார். பின்பு தான் வைத்திருந்த குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு தன் இருபக்கத்திலும் இருவரை நிற்கும்படி பணிந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர் அருகில் இருந்த முத்தர்மோன் திடீரென ஏதோவோர் சத்தியால் உந்தப்பட்டு அருகில் கிடந்த கற்களை எல்லாம் பொறுக்கி எடுத்து கடையிற் சுவாமிகளை முருகனாகவும் அவர் அருகில் நின்ற இருவரையும் வள்ளி தெய்வானையாகவும் கருத்திற்கொண்டு முருகப்பெருமான் திருக்கோயிலை அடையாளப்படுத்தினார்.

பின்னர் தெளிந்து பின்னர் நடைபெற்றவையாவும் முன்னைத் தவவிசேடத்தினால் நிகழ்ந்தவை என்றுணர்ந்து அவ்விடத்திலேயே முருகன் கோயிலைக் கட்டினார். ஆரம்பத்தில் இவரால் வணங்கப்பட்ட ஐயனாரை புதிதாக அமைந்த கோயிலின் வெளிவீதியில் நிறுவப்பட்டு பரிவாரக் கோயிலாக அமைத்துக் கொண்டார். முத்தர்மோன் என்றழைக்கப்பட்ட குமாரவேலுவின் சமாதி இக்கோயிலின் தெற்கே உள்ள இவரது காணியில் கட்டப்பட்டுள்ளது.

(19) சடையம்மா சித்தர் – கடையிற் சுவாமிகளைத் தேடிச் சென்று சடையம்மா அம்மையாரும் அவர் கணவரும் சென்று வழிபட்டதாக கூறப்படுகின்றது. சடையம்மா அம்மையாரின் குருநாதர்களாக கடையிற் சுவாமிகளும் பால்குடி பாபாவும் கருதப்படுகிறார்கள்.

(20) ஏரம்பு சுப்ரமணிய ஐயர் – ஏற்கனவே இவர் யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் என்ற நூலை எழுதியதாக கூறப்படுகின்றது. கொழும்புத்துறையை சேர்ந்தவர். மேலும் பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் எழுதிய குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும் என்ற நூலில் பின்வரும் ஒரு நிகழ்வைக் கூறுகிறார். கட்டிலிலுள்ள நீளத் தலையணை மூடைகள் ஒரு வரலாற்றோடு தொடர்புடையவை என்று அங்குள்ளார் கூறக்கேட்கலாம். சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் கொழும்புத்துறை வாசியொருவர் பத்திப் பெருக்குடன் வாழ்ந்து வந்தார். எடுத்த பிறப்பிலேயே ஒரு ஞானகுருவை அடையும் வாய்ப்புக் கிடைத்துவிடவேண்டும் என்ற தவிப்பு அவருக்கு ஏற்பட்டிருந்தது அவர் நீளத் தலையணைகள் இரண்டைப் புதியனவாகத் தயாரித்துத் தமக்கு எவர் ஞானகுருவாய் வந்து வாய்ப்பாரோ அவருக்கே அவையுரியன என்று நேர்த்திக்கடன் செய்து தம் வீட்டு மஞ்சத்தில் அவற்றைப் பேணி வைத்துக்கொண்டிருந்தார்.

திடீரென ஒருநாள் கடையிற்சுவாமிகள் அவருடைய வீட்டு முற்றத்திலே தோன்றி வாயிலுக்குக் கிட்ட நின்றுகொண்டு, 'கொண்டுவாடா அந்தத் தலையணை யிரண்டையும்' என்று உரக்கச் சத்தமிட்டார். உள்ளே யாதோ அலுவலாயிருந்து கொண்டிருந்த அவ்வன்பர் அதுகேட்டு விரைவாக வெளியே வந்தார். 'கொண்டுவாடா தலையணையிரண்டையும்' என்று மீண்டுமொருமுறை கூறிவிட்டுச் சுவாமிகள் விறுக் கெனத் திரும்பி விசையாக நடந்துகொண்டிருந்தார். தம்மை மறந்த நிலையில் தலையணைகளை எடுத்தேந்திக் கொண்டு அவ்வன்பர் பின்தொடரலாயினர். இவ்வகையில், ஆன்மதாகமுற்றிருந்த அன்பரொருவரைச் சுவாமிகளுக்கு ஆட்படுத்தி வைத்த பெருமை வாய்ந்தவை அத்தலையணையிரண்டும் என அறியவருகின்றது.

ஒருவேளை இவ்வரலாற்றில் கூறபபடும் கொழும்புத்துறைபி பெருமகனார் தான் சுப்ரமணிய ஐயராக இருக்கலாம்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# ஓதுவார்கள் உருவாக வேண்டும்!

சைவ சமய மரபின் உயிர்மூச்சாக விளங்குவது திருமுறைகளாகும். அந்தத் திருமுறைகளை இசை நயத்துடன் இறைவன் முன்பாகவும் மக்களிடையேயும் எடுத்துச் செல்லும் அரிய பணியைச் செய்பவர்களே ஓதுவார்கள். ஆலய வழிபாட்டின் ஓர் அங்கமாக மட்டுமன்றி, தமிழ் மொழி, இசை, சமயம் மற்றும் பண்பாட்டு மரபின் காவலர்களாகவும் அவர்கள் திகழ்கின்றனர். எனினும், இன்று எம் நாட்டில், ஓதுவார் மரபின் தொடர்ச்சி குறித்து அச்சம் எழுந்துள்ள நிலையில், புதிய ஓதுவார்களை உருவாக்க வேண்டிய தேவை மிகவும் தீவிரமாகியுள்ளது.

தமிழர் சமய வரலாற்றில் ஓதுவார்களுக்கு உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. தேவாரம், திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை போன்ற திருமுறைகள் கோயில்களில் ஒலிக்கக் காரணமாக இருப்பவர்கள் ஓதுவார்களே. அவர்கள் பாடும் திருமுறை இசை, பத்தர்களின் உள்ளங்களில் இறையுணர்வைத் தூண்டுவதோடு, தமிழின் இனிமையையும் சமயத்தின் ஆழத்தையும் உணர்த்துகின்றது. ஆனால் இன்றைய சூழலில் இத்தகைய அர்ப்பணிப்புடன் செயல்படும் ஓதுவார்களின் எண்ணிக்கை குறைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

இளைய தலைமுறையினர் ஓதுவார் பணியில் ஆர்வம் காட்டாததற்கு பல காரணங்கள் உள்ளன. பொருளாதாரப் பாதுகாப்பின்மை, தொழில் வாய்ப்புகள் குறைவு, நீண்டகாலப் பயிற்சியின் அவசியம், சமூக அங்கீகாரத்தின் பற்றாக்குறை போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மருத்துவர், பொறியாளர், ஆசிரியர் போன்ற தொழில்களுக்கே வழிநடத்த விரும்புகின்றனர். இதனால் சமய மற்றும் பண்பாட்டு மரபுகளைத் தொடரும் துறைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

இந்நிலை தொடருமானால், எதிர்காலத்தில் ஆலயங்களில் திருமுறைகளை முறையாகப் பாடுவதற்கான ஆளுமைகள் குறைந்து போகும் அபாயம் ஏற்படலாம். திருமுறைகள் நூல்களில் மட்டும் இருப்பது போதாது அவை உயிரோசையுடன் மக்களின் செவிகளில் ஒலிக்க வேண்டும். அதற்காக ஓதுவார் மரபு உயிர்ப்புடன் நிலைத்திருக்க வேண்டும்.

எனவே, புதிய ஓதுவார்களை உருவாக்குவதற்கான திட்டமிட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆலயங்கள், சமய அமைப்புகள், பாடசாலைகள் மற்றும் கலாசார நிறுவனங்கள் இணைந்து திருமுறை மற்றும் தேவார இசைப் பயிற்சிகளை நடத்த வேண்டும். திறமையான மாணவர்களுக்கு ஊக்கத்தொகைகள் வழங்கப்பட வேண்டும். ஓதுவார்களின் சேவைக்கு உரிய மரியாதையும் பொருளாதாரப் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். திருமுறைப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகள், பயிற்சி முகாம்கள் ஆகியவற்றின் மூலம் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இளைய ஓதுவார்களை உருவாக்குவது தமிழ் மொழியையும், இசை மரபையும், சைவ சமயப் பாரம்பரியத்தையும் எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கும் பணியாகும். மேலும், ஓதுவார் மரபை ஆண்களுக்கே உரிய துறையாகக் கருதும் பாரம்பரிய எண்ணத்திலிருந்தும் நாம் படிப்படியாக வெளியே வர வேண்டும். திருமுறை அறிவும் இசைத் திறமையும் கொண்ட பெண்கள் மற்றும் இளம் மாணவர்களும் இந்தத் துறையில் பங்களிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இணையவழி திருமுறைப் பயிற்சிகள், ஒலிப்பதிவுகள், காணொளிப் பாடத்திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர் பிள்ளைகளை இம்மரபுடன் இணைக்க முடியும். காலத்திற்கேற்ற மாற்றங்களை உள்வாங்கியவாறே மரபைக் காப்பதே அதன் நிலைத்த வாழ்வுக்கான சிறந்த வழியாகும்.

திருச்சிற்றம்பலம்

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**44. "நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நனியானே!**

**நாற்றத்தின்:- பூவின் மனம் போல.**

**நேரியன்:- நுண்ணியன்.**

பூவின் மனம் போல நுண்ணியனாக இருப்பவன் சிவபெருமான். பூவின் மணம் அனுபவிக்க முடியும், பார்க்க முடியாது. அது போல பெருமானை அருட் திறத்தை உணர முடியும், அவனைக் காண முடியாது.

**"கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரை"** என்றார் மணிவாசகர் திருப்பள்ளி எழுச்சியில். இதையே **"நாற்றத்தின் நேரியாய்"** என்றார். இதன் பின் **"பரியாய்"** என்பதை வருவித்துக் கொள்ள வேண்டும். **"பரியாய்"** என்றால் பருமை என்று பொருள்.

நுண்மை அறிதற்கரிய அவனது உண்மை இயல்பையும், பருமை அவனது பொது இயல்பும் என்க. உண்மை இயல்பு அறிதற்கரியதாயினும் ஆயினும் அனுபவிக்கப் படும் என்றதற்கு **"நாற்றத்தின்"** என்று அருள் செய்தார்.

சேயாய்:–மறைந்து இருக்கும் நிலை. புறத்தார்க்கு சேயோன்.

**"புறச் சமயத்தவர்க்கு இருளாய் அகச்சமயத்து ஒளியாய்"** சிவப்பிரகாசம்.

**"புலன் வழி போய் திருகும் உலகத்தார் நினைவினுக்கு சேயாய் வருக!"** என்று புலன்வழி போகும் உலகத்தவர்க்கு சேயாய் உள்ளான் என்கிறார் மாதவ சிவஞான யோகிகள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இருப்பவர்க்கு தொலைவில் உள்ளான்.



பேராசிரியர் சித்தாந்த
சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.

பெருமானை வழிபாடு செய்பவருக்கு அணியனாகவும், அன்பாக வழிபாடு செய்பவர்களுக்கு மிக அணியனாகவும், திருவடி ஒன்றே நினைந்து உருகும் ஞானிகளுக்கு மிக மிக அணியனாகவும் உள்ளான்.

**நணிமை:-** வெளிப்பட்டு நிற்கும் நிலை. பக்குவம் இல்லாத அடியார்க்கு தன்னை மறைத்தும் பக்குவம் உள்ள அடியார்க்கு வெளிப்பட்டும் நிற்கிறான். இதையே "சேயாய் நணியானே" என்கிறார்.

**45."மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!"**

**மாற்றம்:- உரை.**

உயிரின் உணர்ச்சியாய் உள்ளத்தில் சுரந்த ஒன்று. வைகரி வாக்காக வெளிப்படுத்தலாய மாற்றத்தை அடைதலின் உரையை "மாற்றம்" என்றார்.

மனம், பொறி புலன்களுக்கு துணையாகி விடயங்களை நுகர்ந்து உயிருக்கு உணர்த்துகின்ற உட்கருவி. இது எண்ணுவதே மாற்றமாக வெளிப்படுதலின் இறைவன்

அவற்றுள் அகப்படாது கடந்து நிற்பன்.

**மறையோன்:-** வேதத்தை அருளிச் செய்தவன். சொல்லுக்கும் மனதுக்கும் எட்டாத மறையோன் என்பது தோன்ற **"மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!"** என்றான்.

**46, 47. "கறந்த பால், கன்னலொடு, நெய் கலந்தாற் போலச் சிறந்து, அடியார் சிந்தனையில் தேனூறி நின்று,"**

**கன்னல்:- கரும்புச்சாறு**

**நெய்:- தேன்**

அப்பொழுது கறக்கப்பட்டப் பால் சுவை மிகுதி உடையது. எனவே **"கறந்த பால்"** என்றார். **"நாவிற் கலந்தாற் போல"** என உரைக்க. பால் முதலியவற்றை நினைப்பினும், சொல்லினும், காணினும், நாவில் நீர் ஊறும். அவை நாவில் கலப்பினும் மிக்க இன்பம் பயக்கும என்க!. கறந்த பால், கரும்புச்சாறு, தேன் கலந்தால் எப்படி தித்திக்குமோ அதுபோல் இறைவன் அடியார் மனத்திற்கு இனிப்பவராக இருக்கிறார். தேனூறி நிற்றலாவது கசிவு தருதல்.

**"அடியார் ஆனீர் எல்லீரும்,**
**அகல விடுமின் விளையாட்டை,**
**கடிசேர் அடியே வந்தடைந்து,**
**கடைக் கொண்டு இருமின் திருக்குறிப்பை,**
**செடிசேர் உடலைச் செல நீக்கிச்,**
**சிவலோகத்தே நமை வைப்பான்,**
**பொடி சேர் மேனிப்புயங்கன் தன்**
**பூவார் கழற்கே புகவிடுமே" - 8/45/4**

அடியார் சிந்தனையில் பெருமான் தேனூறி நிற்பதால், உலக போகங்களில் மனம் செலுத்த மாட்டார்கள். இறைவன் திரு உள்ள குறிப்பின் வண்ணம் நடந்து மீண்டு வாரா வழியாகிய சாயுச்சியப் பதவி அடைவர். எனவே இப்படிப்பட்ட அடியார்களுக்கு இறைவன் பரமுத்தி வழங்குவான் என்று இப்பாட்டில் சொல்லப்படுகிறது.

**"தேனாய் இன் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்" - 8/38/10**

**"உருகும் அடியார் அள்ளூற உள்ளே ஊறும் தேன் வருக" (மாதவ சிவஞான முனிவர்)**

அடியார்கள் மனத்தில் இறைவன் தேனைப் போன்று தித்திப்பவனாய் உள்ளான். ஏன் அடியார் உள்ளத்தில் இருக்கிறான் பெருமான்?

மனம், மெய், மொழிகளால் இறைவனை நினைத்துக் கொண்டு உள்ளார்கள் அடியார்கள். எனவே அவர்கள் உள்ளத்தில் இனிப்பவனாக உள்ளான். விறல் மிண்ட நாயனார் புராணத்தில் சுவாமியே, அடியார் நடுவில் இருக்கிறேன் என்று சொல்லுகிறார்.

**"ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி சைவ நல் நெறியின் சீலம் உய்யத், திருத்தொண்ட தொகை முன் பாட, செழுமறைகள் ஓலமிடவும், உணர்வரியார் அடியார் உடனாம் உளது என்றால், ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தார் ஆர்"** என்கிறார் சேக்கிழார்.

உலகினர் உய்யவும், நாம் உய்யவும், நம்பி ஆரூரரின் நல்ல சைவ நெறியின் ஒழுக்கம் வளர்ந்து ஓங்கவும், திருத்தொண்ட தொகை பாடியருள, வளமிக்க நால் மறைகளும் திருவடி கண் அடைக்கலம் எனக் கூறியும், உணர்தற்கு அரியவனாகிய சிவபெருமான் நாம் இருப்பது அடியார்களுடனேயாம் என்று சொல்வாரேயானால் நஞ்சை அமுதாக்கிய இறைவனின் அடியார் பெருமையை யார் அறிந்தார்? ஒருவரும் இல்லை என்பதாம்.

**48."பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!"**

எடுத்த இப் பிறவியிலேயே வினைகளை சேதித்து வீடு அளிப்பான் என்பார். இக்கருத்து **"தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே"** என்ற வெண்பாவிலும் காண்க. பிறந்த பிறப்பிலேயே பிறப்பை அறுக்கக் கூடிய ஆற்றலும் கருணையும் உடையவர் சிவபெருமான்.

திருவருட்பயனில்,

**"இன்பில் இனி தென்றல் இன்புண்டேல் இன்புண்டாம்**
**அன்பு நிலையே அது"**

எல்லா இன்பத்தினும் மேலாகிய பேரின்பத்தை அன்புண்டேல் இன்றே (இப் பிறவியிலேயே) அடைந்து விடலாம். அப்பேரின்பம் தானும் அன்பின் விளைவே ஆகும் என்பதாகும்.மேலும் சித்தியாரில்,

**"சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்திச்,**
**செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக**
**வைத்து ஆண்டு மலம் கழுவி, ஞானவாரி**
**மடுத்து, ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை அறுத்து,**
**முத்தாந்தப் பாதமலர் கீழ் வைப்பான்..." (268 சித்தியார்)**

என்றும் சொல்லப் படுகிறது

சித்தாந்தமே முத்திக்கு நேர்வழியாகும். சித்தாந்த நெறியில் நிற்கும் பக்குவ ஆன்மாக்களுக்கு எடுத்த பிறப்பு ஒன்றிலே சிவபெருமான் தன் காருண்யத்தால் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து திருக்கண் நோக்கம் முதலிய தீக்கை செய்து மலத்தைப் போக்கி ஞானசாகரத்தில் மூழ்குவித்து சிவானந்தம் மேலிடச் செய்து சீவன் முத்தராக்கி மேல் வரும் பிற வினை ஒழித்து முக்தி முடிவு ஆகிய திருவடி மலர் கீழ் அடங்கி நிற்கச் செய்வான்.

மேலும் எட்டாம் நூற்பாவில் சித்தியார் 253ல்,

**"துன்னிய ஐம்புல வேடர் சுழலில் பட்டுத்**
**துணைவனையும் அறியாது துயர் உறும் தொல் உயிரை**
**மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் நீக்கி மலம் அகற்றித் தானாக்கி மலரடி கீழ் வைப்பன்"**

உயிர் செய்த மிகுந்த தவம் முயற்சியால் இரங்கி, நித்த, முத்த, சுத்த, சித்து எனப்படும் தலைவனாகிய அந்த ஈசன், குருவடிவம் கொண்டு எழுந்தருளி வந்து தன்னையும் தலைவனையும் அறியும் வண்ணம் உணர்த்தி, அந்த ஐம்பொறியிலிருந்து நீங்குவதற்கு அதனோடு கூடும்படிச் செய்த ஆணவமல வலியைக் கெடுத்து, அதிலிருந்து மீட்டு பழைய நிலையாகிய தன் வண்ணம் ஆக்கி, அந்த உயிரை மலர் போலும் தனது திருவடிக் கீழ் வைத்து வாழ்விப்பான்.

**"மாய பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி"** (திருவாசகம் 14 வது வரி) அறுத்தப் புல் திரும்ப முளைக்கும். ஆனால் பிறப்பு மாய, (இல்லாமல்) அறுக்கும் மன்னன் என்று கூறுகிறார் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர்.

எப்பொழுது பிறப்பு மாயச் செய்வார்?. உயிர்கள் மீது உள்ள கருணையால் இந்தப் பிறப்பு லேயே அருள் செய்வார் என்று உணர்த்துகிறார் மணிவாசகர்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ் வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### சங்கிலியாரைத் தந்தருளுமாறு ஒற்றியூர் இறைவரிடம் விண்ணப்பித்தல்

சுந்தரனார் ஒற்றியூர் திருக்கோயிலின் மலர் மண்டபத்தில் சிவஞானச் செல்வியாரான சங்கிலிப் பிராட்டியாரைக் கண்டு காதல் கொள்கின்றார். தன் வாழ்வில் எத்தகைய சூழல் நேர்ந்தாலும், அதனை இறைவனிடமே நேரடியாக முறையிட்டு விண்ணப்பித்துக் கொள்வதொன்றே ஆரூரர் அறிந்துணர்ந்த உத்தம நெறியாகும். ஆதலின், சங்கிலியாரைத் தனக்குத் தந்தருள வேண்டும் என்ற குறிப்புடன் ஆதிபுரீசுவரப் பரம்பொருளின் திருமுன்பாகச் செல்கின்றார். எனினும் நம்பிகள் உள்ளத்தில், **"இறைவர், நாம் பரவையை முன்னரே உனக்கு அருளியிருந்தோமே, இப்பொழுது மீண்டும் என்ன காதல் விண்ணப்பம்?"** என்று மறுத்துவிட்டால் என்ன செய்வது என்ற சிறிய ஐயமும் எழுகின்றது.

ஆதலால் ஒற்றியூர் முதல்வரிடம், **"இடப்பாகத்தில் உமையன்னையாகிய காதலியாரைக் கொண்டருளும் நிலையிலும், திருமுடியில் கங்கையென்னும் மற்றொரு நங்கையை மறைத்து வைத்தருளும் அரியதொரு காதலுடையீர்! இங்கு உமக்குத் திருமாலை தொடுத்து, என் உள்ளத்து உறுதியை அவிழ்த்த முழுமதி போன்ற வதனத்தை உடைய சங்கிலியைத் தந்து அடியேனின் வாட்டத்தைப் போக்கியருள்வீர்"** என்று நயம்பட விண்ணப்பித்து இறைஞ்சுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

மங்கைஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்

**கங்கை தன்னைக் கரந்தருளும் காதலுடையீர் அடியேனுக்(கு)**
**இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடையவிழ்த்த**
**திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீருமென**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 232)**

மேலும் படம்பக்க அண்ணலாரிடம் பல்வேறு வகைகளில் தன் உள்ளக் குறிப்பையும், காதலுணர்வையும் இனிய மொழிகளால் எடுத்துரைத்துப் பின் சன்னிதியினின்றும் வெளிப்பட்டு வருகின்றார். உள்ளத்திலோ, **"ஐயனே! மனம், மெய், வாக்கினால் உமக்கு அடிமை செய்வதொன்றையே கொள்கையெனக் கொண்டிருந்த அடியேனின் உள்ள உறுதியைக் கணநேரத்தில் இக்காரிகை சிதறச் செய்து விட்டாளே! இனிச் செயலொன்றும் அறியேன், அருள் புரிவீர்"** என்று மிகவும் தளர்வுற்று வருந்துகின்றார்.

**அண்ணலார்முன் பலவும்அவர் அறிய உணர்த்திப் புறத்தணைந்தே**
**எண்ணமெல்லாம் உமக்கடிமை ஆமாறெண்ணும் என்னெஞ்சில்**
**திண்ணமெல்லாம் உடைவித்தாள் செய்வதொன்றும் அறியேன் யான்**
**தண்ணிலா மின்னொளிர் பவளச் சடையீர் அருளும் எனத் தளர்வார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 233)**

இவ்வாறு, தன் அடியவனின் தளர்ச்சியைக் கண்டு, அவனது வருத்தத்தைத் தீர்க்கும் பொருட்டு ஒற்றியூர் பெருமான் சங்கிலியாரின் கனவில் எழுந்தருளத் திருவுள்ளம் கொள்கின்றார். தம்பிரான் தோழரின் இந்த ஆழமான பத்தியும் உரிமையோடிட்ட காதலும் பெரியபுராணத்தில் மிக அழகாக விவரிக்கப்பட்டுள்ளது.

### சங்கிலியாரின் கனவில் தோன்றி அருள் புரிந்த ஒற்றியூர் இறைவர்

சுந்தரனார் ஒற்றியூர் ஆலய மலர் மண்டபத்தில் சங்கிலி யாரைக் கண்டு காதல் கொண்டு, இறைவனிடம் வேண்டுகின் றார். அன்றைய மாலைப் பொழுதில் வன்தொண்டரின் முன்பாக எழுந்தருளிய ஒற்றியூர் அண்ணலார், **"அருந்தவச்**

**செல்வியான சங்கிலியை உனக்குத் தருகின்றோம், கவலையை ஒழிப்பாய்"** என்றருளி மறைகின்றார். பின்னர் இறைவர் சங்கிலியாரின் கனவினில் எழுந்தருள, சங்கிலி நாச்சியார் ஆதிமூர்த்தியைத் தொழுதிறைஞ்சி, **"அடியேன் உய்ய எழுந்தருளும் இப்பெரும் பேற்றிற்கு என்ன கைமாறு செய்வேன்?"** என்று சிவஞான இன்ப வெள்ளத்தில் அமிழ்ந்து உளமுருகி விண்ணப்பிக்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**தோற்றும் பொழுதில் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமாய்**
**ஆற்ற அன்பு பொங்கியெழுந்(து) அடியேன்உய்ய எழுந்தருளும்**
**பேற்றுக்(கு) என்யான் செய்வதெனப் பெரிய கருணை பொழிந்தனைய**
**நீற்றுக் கோல வேதியரும் நேர் நின்றருளிச் செய்கின்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 238)**

அவளது விண்ணப்பத்தை ஏற்ற திருநீற்றுக் கோல வேதியரான பெருமான், **"சீரிய தவமுடைய சங்கிலியே கேள்! நம்பால் மிகுந்த அன்புடையவனும், வெண்ணெய்நல்லூரில் யாவரும் அறிய நம்மால் வலிய ஆட்கொள்ளப் பெற்ற உரிமையுடையவனுமாகிய நம்பியாரூரன் உன்னை வேண்டி நின்றான். நீ அவனை மணத்தால் மகிழ்வுடன் அணைவாய்"** என்று கட்டளையிடுகின்றார்.

**சாரும் தவத்துச் சங்கிலிகேள் சால என்பால் அன்புடையான்**
**மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்**
**யாரும்அறிய யான்ஆள உரியான் உன்னை எனையிரந்தான்**
**வார்கொள் முலையாய் நீயவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்தென்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 239)**

சங்கிலியார் இறைவரின் திருவடித்தாமரைகளில் வீழ்ந்தெழுந்து, **"எம்பிரானே! நீர் அருளிச் செய்தவருக்கே யான் உரியவள் உம் கட்டளையைச் சென்னிமீது தரித்துக் கொண்டேன். எனினும், உம் அடியவளுக்கு ஒரு விண்ணப்பம் உண்டு"** என்று தொழுகின்றார்.

**எம்பிரானே நீர்அருளிச் செய்தார்க்(கு) உரியேன் யான் இமையோர்**
**தம்பிரானே அருள்தலைமேல் கொண்டேன் தக்க விதிமணத்தால்**
**நம்பியாரூரருக்(கு) என்னை நல்கியருளும் பொழு(து) இமயக்**
**கொம்பின்ஆகம் கொண்டீர்க்குக் கூறும் திறமொன்(று) உளதென்பார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 241)**

சங்கிலியார் நாணம் மேலிட, **"பெருமான் திருவாரூரில்**




**மிகவும் மகிழ்ந்து உறைபவர் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு அருள வேண்டும்"** என்று, சுந்தரர் தன்னைத் தவிக்கவிட்டுத் திருவாரூர் சென்றுவிடுவாரோ என்ற தன் அச்சத்தை நயம்பட உரைக்கின்றார்.

**பின்னும் பின்னல் முடியார்முன் பெருக நாணித் தொழுரைப்பார்**
**மன்னும் திருவாரூரின்கண் அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவ(து)**
**என்னும் தன்மை அறிந்தருளும் எம்பிராட்டி திருமுலைதோய்**
**மின்னும் புரிநூல் அணிமார்பீர் என்றார் குன்றா விளக்கனையார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 242)**

ஒற்றியூர் அண்ணலார் சங்கிலியாரின் அச்சத்தை உணர்ந்து, **"உன்னைப் பிரியேன் என்று சுந்தரன் உனக்குச் சத்தியம் செய்து தருவான்"** என்று தேறுதல் கூறித் தனது திருவுருவத்தை மறைத்தருள்கின்றார்.

**மற்றவர்தம் உரைகொண்டு வன்தொண்டர் நிலைமையினை**
**ஒற்றிநகர் அமர்ந்த பிரான் உணர்ந்தருளி உரைசெய்வார்**
**பொற்றொடியாய் உனைஇகந்து போகாமைக்(கு) ஒருசபதம்**
**அற்றமுறு நிலைமையினால் அவன்செய்வான் எனஅருளி**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 243)**

இவ்வாறு, சங்கிலியாரின் தெய்விக அச்சத்தையும், சுந்தரரின் பேரன்பையும் திருவுள்ளத்தில் கொண்டு, ஒற்றியூர் நாதர் இருவரையும் இணைக்கத் தம் திருவிளையாடலை நிகழ்த்திய இத்தருணம், அடியவர்களின் மீதான ஈசனின் கருணையை உணர்த்தும் உன்னதமான பத்தியின் வெளிப்பாடாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஈழத்துச் சிதம்பரம் என்று புகழப்படும் காரைநகர் திண்ணபுர சுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா




### தோற்றுவாயும் காரைநகர்ப் பதியின் திருத்தல அமைவிடமும்

ஈழத்துச் சைவப் பெருநிலத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குத் திசையில், நாற்புறமும் கடல் அலைகளால் சூழப்பட்டு இயற்கை எழிலோடு திகழும் தூய பதி காரைதீவு (காரைநகர்) ஆகும். முற்காலத்தில் காரைச்செடிகள் அடர்ந்து காணப்பட்டதால் இத்தீவு **'காரைதீவு'** எனப் பெயர் பெற்றது. அகத்திய முனிவர் வரலாற்றின்படி, முற்காலத்தில் ஏற்பட்ட கடல்கோளினால் பேரரசு நிலப்பரப்புகள் மூழ்கியபோது எஞ்சிய தூய பகுதியே இத்தீவென்றும், மணிமேகலை காப்பியத்தில் கூறப்படும் அமுதசுரபி பெற்ற 'மணிபல்லவம்' இக்காரைதீவே என்றும் சான்றோர்கள் கருதுகின்றனர். கி.மு. 400 காலப்பகுதியில் வாழ்ந்த அகத்திய முனிவர் மற்றும் தூருவாச முனிவர் போன்ற பெருந்தவச் செல்வர்கள் தவம் இயற்றிய பெருமைமிகு தூர்வாகிரி (இன்றைய தூம்பில் பகுதி) இத்தீவிலேயே அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள காரைநகர் பிரதேசத்தில் தூய சைவநெறியும் அதன் தமிழ்ப் பண்பாடும் காலந்தோறும் சிறப்புற்று விளங்கி வருவதற்கு அப்பிரதேசத்தில் அமைந்துள்ள திருக்கோயில்கள் பெரும் சான்றாக அமைகின்றன. தமிழ்நாட்டில் நாயன்மார்களால் திருமுறைப் பாடல் பெற்றுப் புகழடைந்த திருத்தலங்களை நெஞ்சார நினைந்து நினைந்து வழிபடுவதற்கென்று ஈழத்து மண்ணில் பல திருத்தலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அந்த உன்னத வரிசையில், தில்லைச் சிதம்பரப் பெருங்கோயிலுக்கு ஒப்பாக, "ஈழத்துச் சிதம்பரம்" என்று அடியவர்களால் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரச் சுந்தரேசுவரர் திருத்தலம் பெரும் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இத்தகைய பெருமை பொருந்திய காரைநகரின் வடகிழக்குப் பகுதியான வலந்தலையின், திண்ணபுரம் என்னும் குறிச்சியில்தான் இத்திருத்தலம் நிலைகொண்டுள்ளது.


### திருத்தல வரலாற்றுப் பின்னணி




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

காரைநகரில் திண்ணபுரம் எனும் திருவிடத்தில் இச்சிவாலயம் தோன்றுவதற்கும், அங்கு சிவபெருமானின் அருளாட்சி நிலைபேறடைந்தமைக்கும் ஆண்டிகேணி ஐயனார் கோயிலும், அங்கு நிலைபெற்ற தூய வழிபாட்டு முறைகளுமே உன்னத காரணமாகும். இவ் ஐயனார் கோயில், யாழ்ப்பாணத்தைத் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில், காவிரிப்பூம்பட்டணத்திலிருந்து வருகை தந்த இராமசேது அரசரின் மகனாகிய குளக்கோட்டு மகாராசா யாழ்ப்பாணத்தை ஆட்சி புரியும் காலத்தில், வணிகத்துறையின் சிறப்பால் எங்கும் பரவலடைந்தது. அவற்றுள் வியாவில் என்ற பகுதியில் அமைந்திருந்த ஐயனார் கோயில் பெரும் புகழ்பெற்றிருந்தது.

கி.பி. 1545 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தபோது, சைவநெறியை அழித்துத் தங்கள் மதத்தை வளர்ப்பதற்குத் தடையாக இருந்த மாபெரும் சைவத் திருத்தலங்களை இடித்துத் தரைமட்டமாக்கினர். அப்பொழுதும் கூட இவ் ஐயனார் ஆலயத்தின் மூலப் படிமத்தை அவர்களால் அழிக்க முடியாமல் போயிற்று. அதனைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில், கி.பி. 1658 ஆம் ஆண்டில் இவ்வாலயம் இடிக்கப்பட்ட போது, இவ்வாலயத்திலிருந்த ஐயனார் திருப்படிமத்தையும், பிற



சிவசீர். க. மங்களேசுவரக் குருக்கள்
(ஈழத்து சிதம்பரத்தின் முதலாவது மூத்த சிவாச்சாரியார்)



**சிவசீர். ச. கணபதீசுவரக் குருக்கள்**
**(1961 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "ஈழத்துச் சிதம்பரம்" நூலின் ஆசிரியர்)**

வழிபாட்டுப் பொருட்களையும் நிலவறையில் ஒழித்து வைத்து, திருமுறைகள் ஓதி இரகசியமாகப் பூசித்து வந்த வரலாற்றை ஈழத்துச் சிதம்பர வரலாற்று ஏடுகளில் கண்டுகொள்ள முடிகின்றது.

ஒல்லாந்தரின் ஆட்சி வீழ்ச்சியுற்று ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்திருந்த காலத்தில், இந்தியாவின் இராமநாதபுரம் சேதுக்கரையைக் காவல் செய்த பிறக்குடி மரபினரான **'ஆண்டி'** என்னும் பெருந்தவச் செல்வர் ஈழத்திற்கு வருகை தந்தார். அவர் அழிவடைந்த ஆலயங்களைக் கண்டு நெஞ்சமுடைந்து மனம் நொந்தார். அப்போது எம்பெருமான் அவரது கனவில் தோன்றி, **"நீயே நான் நானே நீ. தூர்வாச கிரிக்குச் சமீபமாய் அரசமரத்தின்கீழ் இருக்கின்றேன்"** என்று உணர்த்தியருளினார். அதன்படியே ஆண்டிப் பெரியார் அந்த அரசமரத்தின் கீழ் நிலத்தைத் தோண்டியபோது, மறைந்திருந்த ஐயனார் திருப்படிமத்தைத் தனது மெய்யருளால் கண்டுபிடித்து, அவ்விடத்தில் 'ஆண்டிகேணி ஐயனார்' கோயிலை உருவாக்கிப் பரார்த்த பூசைகளைத் தொடங்கினார்.

## ஆண்டிகேணி ஐயனார் கோயில் வரலாற்றுத் தொடர்ச்சி

18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோற்றம் பெற்ற இப்புனித ஐயனார் கோயில், ஆரம்பத்தில் தூய வெண்கற்களினால் (வெள்ளைக்கல்) மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டது. தொடர்ந்து அடியவர்களின் பத்திப் பெருக்கினால் இத்தலம் வளர்ச்சி பெற்று, 1811 ஆம் ஆண்டில் முதலாவது குடமுழுக்கு நடைபெற்றது. பின்னர், 1929-09-06 அன்று இரண்டாவது குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்கோயிலின் அழகிய திருக்கோபுரத்திற்கான அத்திவாரம் 1979-02-07 அன்று இடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கோபுரத் திருப்பணிகள் 1982-10-18 அன்று முறைப்படி தொடங்கப்பட்டு, பேராற்றல் மிக்க இராசகோபுரத்தின் பெரும் குடமுழுக்கு 1998-06-07 அன்று சிவன் கோயில் கோபுரக் குடமுழுக்குடன் இணைந்ததாக மிக விமரிசையாக நிறைவேற்றப்பட்டது.

## அம்பலவாண முருகரின் பத்திப் பெருக்கும் சிவன்கோயில் தோற்றமும்

ஆண்டிப் பெரியாரின் மறைவுக்குப் பின், களபூமிப் பகுதியைச் சேர்ந்த மானாமுதலி வம்சத்தில் உதித்த 'அம்பலவாண முருகர்' என்னும் உன்னத சிவனடியார், ஆண்டிப் பெரியாருடன் நட்புப் பூண்டு இறைவழிபாட்டில் திளைத்திருந்தார். ஒருமுறை தருமம் பெறச் சென்ற இடத்தில் ஏற்பட்ட மனவருத்தத்தால், உப்பு மற்றும் அரிசிச் சாதத்தைத் தவிர்த்து, பச்சிலை, கிழங்குகளை மட்டும் உப்பின்றி அமுது செய்து வாழும் அதியுன்னத பத்தி வைராக்கியத்தை அவர் மேற்கொண்டார். இன்றும் இக்கோயிலில் உப்புச் சேர்க்காமல் நைவேத்தியம் செய்யும் மரபு இதனாலேயே தொடர்ந்து வருகிறது.

ஐயனாரைத் தொழுத அம்பலவாண முருகரின் உள்ளத்தில், சிவபரம்பொருளுக்குத் தனியே ஒரு கற்கோயில் அமைக்க வேண்டும் என்ற பேராவல் பிறந்து, அதற்கான திருப்பணிகள் தொடங்கப்பட்டு 1849 ஆம் ஆண்டில் சிவன்கோயில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கோயிலின் சிவன் மற்றும் அம்மன் வீற்றிருக்கும் கருவறை, அர்த்த மண்டபம்,பெரு (மகா) மண்டபம் ஆகிய யாவும் முழுமையாகக் கருங்கற்களால் மாற்றி அமைக்கப்பட்டு, 1970-07-10 அன்று பெரும் குடமுழுக்கு கண்டது. இச்சிவாலயத்தின் கம்பீரமான இராசகோபுரத்திற்கு 1965-09-08 அன்று மங்கலகரமான முறையில் அத்திவாரம் இடப்பட்டு, கோபுர வேலைகள் 1982-10-18 அன்று ஆரம்பிக்கப்பட்டு, கோபுரக் திருக்குடமுழுக்கு 1998-06-07 அன்று மிக விமரிசையாக நிறைவேறியது.

அம்பலவாண முருகர் தான் கட்டிய சிவன்கோயிலில் அதற்குரிய சிவலிங்கத்தைப் பெறுவது எங்ஙனம் என்ற சிந்தனையில் மூழ்கி இருக்கும்போது, இறைவன் கனவில் தோன்றிச் சிதம்பரத்தில் உள்ள சிற்பாச்சாரி ஒருவரிடம் பதினாறு சிவலிங்கங்கள் உண்டென்றும், தம்மால் அங்கு அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தைப் பெற்று வரும்படி கூறினார். இறைவனின் திருவருளைக் கண்டு வியந்த அம்பலவாண முருகர், சிதம்பரம் சென்று சிற்பாசிரியரை அணுகினார். தான் வந்த நோக்கத்தைத் தெரிவித்து அவரிடமிருந்த பதினாறு சிவலிங்கங்களையும் நோக்கியபோது, இறைவனின் திருக்குறிப்பின்படி ஏழாவது சிவலிங்கத்திலிருந்து வெண்முகில் போன்று ஆவி (காற்று) எழுவதை அவதானித்தார். இறையருளைச் சித்தத்தில் கொண்டு அச்சிவலிங்கத்தைக் கொண்டுவந்து குடமுழுக்குச் செய்து, அன்று முதல் சிவன் கோயிலாக அவ்விடத்தில் நிலைநிறுத்தியதன்படி, **"ஈழத்துச்சிதம்பரம்"** என்று எல்லோரும் அழைக்கலாயினர். இங்குள்ள மூர்த்தி சுந்தரேசுவரர் பெருமானும், அம்மை சௌந்தராம்பிகை என்றும் திருநாமம் இட்டும் அழைக்கலாயினர். இவ்வரலாற்றை ஈழத்துச்சிதம்பரப் புராணம் பின்வரும் திருப்பாடலால் சான்று பகிர்கின்றது:

**"தில்லைத் தலமே யீழத்திற் றிண்ண புரமாத் திகழ்ந்திடுக அல்ல**
**னீக்குங் கூத்தனுட நம்மை யிங்கே யெழுந்தருள்க செல்வச்**
**சுந்த ரேசரெனுஞ் சிவப்பே ரடியார் நாப்பயில்க வல்லி சௌந்த**
**ராம்பிகையாள் காக்க வென்று வாழ்த்தினரால்"**

### தீர்த்தச் சிறப்பும் திருக்குள மகிமையும்

இத்தலத்தின் தீர்த்தம் **'துர்வாசசாகரம்'** என்று அழைக்கப்படுகின்றது. **"ஈழத்துச் சிதம்பரம்"** என்ற நூலில் இத்தீர்த்தத்தின் மாபெரும் தகவல் ஆதி இறைச் சிறப்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. பிதிர்க்கடன், நீர்க்கடன் முதலிய தூய்மைச் சடங்குகளும் அடியார்களால் இத்தீர்த்தத்தில் நிறைவேற்றப்படும். பங்குனி உத்தரம், மாசி மகம், ஆடி மறைமதி (அமாவாசை), அத்தோதயம், மகோதயம் போன்ற புண்ணிய காலங்களில் சுந்தரேசுவரர் பெருமான் எழுந்தருளி துர்வாச சாகரக்கடலில் புனலாட்டு (தீர்த்தோற்சவம்) கொள்வர்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தின்படி, துர்வாச சாகரம் எனும் கடல் தீர்த்தத்தோடு, கோயிலின் உள்வளாகத்தில் 'சித்தாமிர்த வாவி' (திருவாதிரை தீர்த்தக் குளம்) மற்றும் 'பரமானந்த கூபம்' (பரமாதுகூலம் என்னும் திருக்கிணறு) எனும் புனித தீர்த்தங்களும் சிறப்புடன் விளங்குகின்றன. மேலும், அடியார்களின் வழிபாட்டு வசதிக்காக 2002 ஆம் ஆண்டு 'அம்மன் தீர்த்தக் குளமும்' மிகச் சிறப்பாகக் கட்டப்பட்டது. இதனை பின்வரும் ஈழத்துச் சிதம்பர புராணப் பாடல் மிக அழகாகச் சான்று பகிர்கின்றது:

**"கருவினைகள் கழுவுதற்குக் காமர்சித் தாமிருதப்**
**பெருவாவி யுடன்பரமா னந்தமெனும் பெருங்கூபம்**
**மருவாரு மலர்ப்பொழில்கண் மருங்கணையு மாபுரத்திற்**
**றிருவாருந் தீர்த்தமெனத் திகழ்வதூ உஞ் சிறப்பன்றோ"**

### செப்புத் திருமேனிகளின் சிறப்புகள்

ஈழத்துச் சிதம்பரத்தில் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் அம்மையப்ப முருகர் (சோமாசுகந்த மூர்த்தி), நடராசர் பெருமானது திருவுருவம் ஆகிய இரண்டும் சிற்பச் சாத்திர முறைப்படி மிகவும் சிறப்புப் பெற்றவை.

சோமாசுகந்த மூர்த்தி மகிமை: அம்பலவாண முருகரால் சோமாசுகந்த மூர்த்தி சிதம்பரத்திலுள்ள சிற்பியால் வார்க்கப்பட்ட போது, இருமுறை அவ்வடிவம் சிதைவுற்று வெளிவந்தது. மனம் நொந்தனராகிய முருகனார், தனது இரு காதுகளில் தொங்கிய பொற்கடுக்கன்களையும் கழற்றி இறைவனுக்குக் காணிக்கை செலுத்தி, இவற்றையும் உருக்கி வார்க்கும்படி வேண்டினார். சிற்பியும் அப்படியே வார்த்த போது திருவுருவம் மிகச் சிறப்பாக வந்ததைக் கண்டு முருகனார் ஆனந்தமுற்று, உடனே இறைவனின் திருவடி நீழலில் கலந்து முத்தி எய்தினார். பின்பு இவர் மகன் சண்முகத்தார் இவ்வடிவத்தைத் தோணியில் ஏற்றி காரைநகருக்குக் கொண்டு வந்து திருநிலைப்படுத்தல் செய்வித்தார். தந்தை அம்பலவாண முருகனார் விரும்பியவாறு, பங்குனி உத்தரப் பெருந்திருவிழாவில் பிரதான எழுந்தருளி மூர்த்தியாக இவரே பயன்படுத்தப்பட்டு வருகிறார்.

ஆனந்த நடராசர் பேரெழில்: இதேபோல் இங்குள்ள நடராசர் திருவுருவம் ஆகம, சிற்ப சாத்திர இலக்கணங்களிலிருந்து ஒரு இம்மி கூட பிசகாத வண்ணம், சோழபுரம் குருசாமி ஆசாரி என்பவரால் இக்கோயிலிலேயே வைத்து வார்க்கப் பட்டிருப்பதாகப் பலரும் வியந்து கூறுகின்றார்கள். இத்திருவுருவம் வார்க்கப்பட்டும் ஏழெட்டு வருடங்களாகக் குடமுழுக்கு நடைபெறாததால், அவ்வடிவத்தை நெல்லுக்குள் மறைத்து வைத்திருந்தனர். பின்னர் 1908 ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு விழாக்களுக்குப் பின்னர், மார்கழி திருவாதிரை தேர்த்திருவிழாவிலும், ஆனி உத்தரத்திலும்,



1970 ஆம் ஆண்டு திருக்குட நன்னீராட்டு

பங்குனித் தீர்த்தத்திலும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். சிதம்பரத்தில் எப்படி ஆதிரை அருட்காட்சிப் பேறு கிட்டுமோ, அதேபோல இங்கும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார். இந்நடராசரின் திருவாசியில் 50 சுடர்கள் அமைந்துள்ளன. இது திருமந்திரம் கூறும் "ஐம்பதெழுத்தே அனைத்தும் வேதங்களும்" என்ற தத்துவத்தின்படி, இறைவன் ஒருவனே பிரணவப் பேரொளியாகத் திகழ்கிறான் என்பதை உணர்த்துகிறது. மேலும் இங்குத் தில்லைச் சிதம்பரத்தைப் போல் வருடத்திற்கு ஆறு திருமஞ்சனங்களும் (விசேட அபிஷேகங்களும்) முறைப்படி நடைபெற்று வருகின்றன.

### கிரியைகளும் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளும்

கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு பரிவாரத் தெய்வங்களாக அன்னை சௌந்தராம்பிகை, நடேசர், சந்திரசேகர், சோமாசுகந்தர், விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், சைவ சமயக் குரவர்கள் நால்வர் என்போர் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கு நாள்தோறும் ஐந்து கால நித்திய பூசைகள் ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றன.

இத்திருத்தலத்தில் நடைபெறும் திருவிழாக்களில் மார்கழித் திங்களில் பத்து நாட்கள் நடைபெறும் திருவெம்பாவைத் திருவிழா மிகச் சிறப்பு வாய்ந்தது இத்திருநாட்களில் ஆதிரைத் திருமஞ்சனமும், தேர்த்திருவிழாவும், மாலை வேளையில் அப்பர் பெருமானின் திருநேரிசைத் தத்துவப் படியான 'திருவூடல்' மற்றும் திருவூஞ்சல் நிகழ்வும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து, எம்பெருமானின் சுந்தரேசுவரர் பெருவிழா பங்குனி உத்தரத்தில் நிறைவடையும்படி பத்துத் தினங்கள் பிரம்மாண்டமாக நடத்தப்படுவதோடு, அன்னைக்குரிய அம்பாள் திருவிழா ஆடிப்பூரத்தில் நிறைவடையும்படி பத்துத் தினங்கள் வருடந்தோறும் பத்தியோடு நடைபெறும். மேலும், தைத் திங்கள் தொடக்கத்தில் தமிழர் பாரம்பரிய முறைப்படி கதிரவன் பெருமானுக்கும் எம்பெருமானுக்கு அடியவர்கள் பொங்கலிட்டு வழிபடும் உன்னத திருநாளாகப் பாரம்பரியத் தைப் பொங்கல் இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவை மட்டுமன்றி, வருடம் முழுவதும் வரும் விசேட புண்ணிய தினங்களான தைப்பூசம், மாசிமகம், ஆவணிச் சதுர்த்தி, கார்த்திகைத்தீபம் என்பனவும் அடியார்கள் திரளும் பேரன்பான பத்திப் பெருக்குடன் மிகச் சிறப்பாக ஆசார முறைப்படி நடைபெற்று வருகின்றன.

ஆண்டிப் பெரியார் மற்றும் அம்பலவாண முருகர் காலம் முதல் இன்றுவரை சில தூய தமிழ் மரபு வழியான வழிபாட்டு நம்பிக்கைகள் மற்றும் கடுமையான ஆசார விதிகளும் பின்பற்றப்பட்டு வருவது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்:

திருவமுதுக்கு (நைவேத்தியத்திற்கு) எடுக்கும் நெல்லரிசி கைகளால் மர உரலில் இட்டுக் குற்றப்படுவதாகும்.

அம்பலவாண முருகரின் சபதத்தின்படி, எம்பெருமானின் அமுதுக்கு உப்பில்லாது சமைத்து அமுது செய்வித்தலாகும்.

தூய வெள்ளிப் பாத்திரத்தில் மட்டுமே ஆதியினின்றும் பால் கறந்து எடுத்து வந்து எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்தலாகும்.

திருமஞ்சனத்திற்குப் பயன்படுத்தப்படும் நல்லெண்ணெய், செக்கு உரலில் தூய எள்ளைத் துவைத்துப் பிழிந்து எடுக்கப்படுவதாகும்.

சைவ அடியார்களே தூய ஆன்மீக முறையில் திருநீற்றைத் (விபூதியை) தயாரித்துக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுப்பதும், தற்சமயம் கோயிலிலேயே திருநீறு தயாரித்துத் திருமஞ்சனத்தில் பயன்படுத்தியும் வருகின்றனர்.

### திருத்தலத்தின் பெருமை பகரும் தமிழ் பிரபந்த இலக்கியங்கள்

ஈழத்துச் சிதம்பரத்தின் மீது தலபுராணம், ஊஞ்சல், மான்மியம், திருப்பதிகம், திருச்சதகம், வெண்பா என்னும் தூய தமிழ்ப் பிரபந்த இலக்கியப் பாரம்பரியம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளது. இத்தலத்தின் மீது கிட்டத்தட்ட பதினேழுக்கு மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் தோன்றிச் சைவத் தமிழ் உலகிற்குப் பெருமை சேர்த்துள்ளன. அவற்றுள் முக்கிய இலக்கியங்கள் வருமாறு:

**திண்ணபுர அந்தாதி (1897):** மகாவித்துவான் மு. கார்த்திகேயப்புலவர் அவர்களால் பாடியளிக்கப்பட்ட பழைமையான நூல்.

**திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் ஊஞ்சல் (1910):** வித்துவான் மு. சபாரத்தின ஐயர் அவர்களால் பாடப்பெற்ற ஊஞ்சல் பிரபந்தம்.

**திண்ணபுரத் திருப்பதிகம் மற்றும் திண்ணபுர ஊஞ்சல் (1926):** அருளாளர் நாகமுத்துப்புலவர் அவர்களால் பத்திப் பெருக்குடன் பாடியவை.

**திண்ணபுர வெண்பா (1926):** பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களால் இயற்றப்பட்ட வெண்பா மாலை.


**திண்ணபுர மான்மியம் (1960):** பெருமதிப்பிற்குரிய இ. வைத்தியலிங்கம் ஆசிரியர் அவர்களால் தலமகிமை கூறப் பாடியது.

**ஈழத்துச் சிதம்பரம் (1961):** சிவசீர் ச. கணபதீசுவரக் குருக்கள் அவர்களால் இயற்றப்பட்ட வரலாற்றுப் பெட்டகம்.

**அருள்மிகு சுந்தரேசுவரன் திருப்பதிகம் மற்றும் திண்ணபுர இலிங்கப்பதிகம் (1967):** அருட்கவி சி. வினாசித்தம்பி அவர்களால் பாடியருளிய திருப்பதிகங்கள்.

**ஈழத்துச் சிதம்பர புராணம் (1970):** புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களால் பாடி, பண்டிதர் இ. பரமேசுவரியாரால் விரிவுரை செய்யப்பட்டது. இந்நூல் 10 சருக்கங்களையும் 806 தூய தமிழ்ப் பாடல்களையும் கொண்டு, ஈழத்துச் சைவ வரலாற்றில் எழுந்த உன்னத தலபுராணங்களுள் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

**சுந்தரத் தமிழ்மாலை, திண்புரக்கவிமலர், திருச்சதகம் மற்றும் ஐயனார் கவசம்:** கவிஞர் சி. பொன்னம்பலம் அவர்களால் பாடப்பெற்ற கவிதைத் தொகுப்புகள்.



ஆண்டிப் பெரியாரால் அரசமரத்தின் கீழ் வைத்து வழிபடப்பட்ட சூலம்

**ஈழுத்துச் சிதம்பரம் (1984):** சைவப் பெரியார் திரு. சு. முருகேசு அவர்களால் தொகுத்துப் பாடப்பட்ட நூல்.

### ஈழத்துச் சிதம்பரம் வரலாற்றுச் சிறப்புமிக்க குடமுழுக்கு விபரங்கள்

காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருத்தலத்தில் காலந்தோறும் ஆகம விதிமுறைகளின்படி மிகச் சிறப்பாக நடைபெற்ற பெரும் குடமுழுக்குகள் (கும்பாபிஷேககங்கள்) மற்றும் இறைத்திருமேனி நிலைப்படுத்தல் வரலாற்று விபரங்கள் பின்வரும் அட்டவணையில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு மற்றும் தேதி | குடமுழுக்கு மற்றும் திருநிலைப்படுத்தல் விபரங்கள் |
|---|---|
| 1811 | அம்பலவாண முருகரால் நடாத்தப்பட்ட ஐயனார் முதலாவது குடமுழுக்கு. |
| 1848 | அருள்மிகு சுந்தரேசுவரர் (சிவன்) முதலாவது திருக்குட நன்னீராட்டு |
| 1903-03-19 | அருள்மிகு சுந்தரேசுவரர் இரண்டாவது திருக்குட நன்னீராட்டு |
| 1908-04-23/30 | ஐயனார் சிவன் இராசகோபுரக் குடமுழுக்குடன் நடேசர், முருகன் திருநிலைப்படுத்தல். |
| 1910-09-08 | அருள்மிகு சந்திரசேகரர் மூர்த்தி திருநிலைப்படுத்தல் |

| | |
|---|---|
| 1929-09-06 | ஆண்டிகேணி ஐயனார் பெருமான் இரண்டாவது குடமுழுக்கு. |
| 1931-11-27 | ஒண்பான்கோள்கள் (நவக்கிரக மூர்த்திகள்) திருநிலைப்படுத்தல் குடமுழுக்கு. |
| 1934-01-26 | அருள்மிகு சுந்தரேசுவரர் மூன்றாவது திருக்குட நன்னீராட்டு |
| 1948-06-17 | அ.ஆண்டி ஐயா, து. முருகேசு ஆகிய எசமானர்களின் தலைமையில் நடைபெற்ற நூற்றாண்டு சிறப்புத் திருமஞ்சனம் |
| 1950-11-29 | அருள்மிகு சுந்தரேசுவரர் நான்காவது திருக்குட நன்னீராட்டு |
| 1970-07-10 | அருள்மிகு சுந்தரேசுவரர் ஐந்தாவது திருக்குட நன்னீராட்டு |
| 1998-07-07 | அருள்மிகு சுந்தரேசுவரர் ஆறாவது திருக்குட நன்னீராட்டு |
| 2001 நவம்பர் | ஐயனார் சிவன் இராசகோபுரப் பெருஞ்சாந்தி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா |

குறிப்பு: இத்திருத்தலத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியில், பல ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஆனித் திங்கள் 21 ஆம் நாள் (05-07-2026) ஞாயிற்றுக்கிழமை அன்று இராசகோபுரங்களுக்கும் மூலமூர்த்திகளுக்கும் பெருந் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா (மகா கும்பாபிசேகம்) எம்பெருமான் திருவருளும் சைவப்பெரும் ஆதீன குருமகாசந்நிதானங்களின் குருவருளும் ஒருங்கே கிடைக்கப்பெற சிறப்பான முறையில் நிறைவேறத் திருவருள் கைகூடியுள்ளது.

### 2026 ஆம் ஆண்டு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா விபரம்

பல ஆண்டுகளுக்குப் பின்னர், உலகமெங்கும் வாழும் சைவப் பெருமக்களின் மனக்குறை தீர்க்கும் வண்ணம் இத்திருத்தலத்தில் பெருந் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா (மகா கும்பாபிசேகம்) 2026 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் மிக பிரம்மாண்டமாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

### விழாக்காலத் திருக் கிரியை விபரங்கள்:

**கிரியைகள் தொடக்கம் (கர்மாரம்பம்):** ஆனித் திங்கள் 15 ஆம் நாள் (29-06-2026, திங்கட்கிழமை) அன்று விசேட தூய்மைச் சடங்குகள் மற்றும் யாகசாலைப் பூசைகளுடன் குடமுழுக்குக் கிரியைகள் பத்திப் பெருக்குடன் ஆரம்பமாகும்.


**எண்ணெய்க்காப்பு சாத்துதல்:** ஆனித் திங்கள் 18 ஆம் நாள் (02-07-2026, வியாழக்கிழமை) காலை 10.00 மணி முதல் தொடங்கி, ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (04-07-2026, சனிக்கிழமை) மதியம் 12.00 மணி வரை அடியார் பெருமக்கள் அனைவரும் எம்பெருமானின் திருமேனிகளுக்கும் அம்பிகைக்கும் தங்களின் கரங்களால் எண்ணெய்க்காப்புச் சாத்திப் புண்ணியப் பேறு பெறலாம்.

**பெருந் திருக்குட நன்னீராட்டு (மகா கும்பாபிசேகம்):** ஆனித் திங்கள் 21ஆம் நாள் (05-07-2026, ஞாயிற்றுக் கிழமை) அன்று விடைவான் நல்வேளையில், இராசகோபு ரங்களுக்கும், மூலமூர்த்திகளுக்கும் பெருந் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மிகச் சிறப்பான முறையில் நிறை வேற்றப்படும்.

**மண்டலத் திருமஞ்சனம்:** மேற்படி பெருந்திருக்குட நன்னீராட்டுத் தினத்தினைத் தொடர்ந்து நாற்பத்தைந்து (45) தினங்கள் அடியவர்களின் நல்வாழ்வுக்காகத் தொடர்ந்து மண்டலத் திருமஞ்சன விசேட வழிபாடுகள் இத்தலத்தில் இடம்பெறும்.

### இப்பெருவிழாவின் சிறப்பம்சங்கள்:

இவ்விழுமிய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவானது, ஈழத்துச் சைவ வரலாற்றில் என்றும் அழியாப் பெருமையினைத் தோற்றுவிக்கப் போகின்றது. இதன்பொருட்டு, தமிழகத்துத் தொன்மைச் சிறப்புமிக்க சைவப் பெரும் ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்கள் நேரில் எழுந்தருளித் தங்களின் குருவருளையும் ஆசியினையும் வழங்க உள்ளார்கள். மேலும், தலைசிறந்த சிவாச்சாரியப் பெருமக்கள் ஆகம விதிப்படி கிரியைகளைத் தலைமை தாங்கி நடத்த உள்ளதோடு, திருமுறை ஓதுவார் பெருமக்கள் தங்களின் இனிய குரலில் பன்னிரு திருமுறைகளையும் பண்ணோடு ஓதி யாகசாலையையும் திருத்தல முன்றலையும் பத்தி வெள்ளத்தில் திளைக்க வைக்க உள்ளமை இக்குடமுழுக்கின் ஆகச்சிறந்த சிறப்பம்சமாகும்.



அம்பலவி முருகருடைய கையால் எழுதப்பட்ட திருவாசக ஏடு.
இந்த ஏடு பூசை செய்யப்பெற்று மணிவாசகர் திருமுன்பு வைக்கப்பட்ட பின்னரே திருவெம்பாவை ஓதப்பட்டு வருகிறது.

### முடிவுரை

ஆண்டிப் பெரியார் என்னும் மேன்மைதகு துறவியாலும், பத்திச் பெருக்கின் சிகரமாக விளங்கிய அம்பலவாண முருகராலும் தங்களின் ஆன்மப் பேரொளியால் தோற்று விக்கப்பட்ட உன்னத ஆன்மீகப் பேரரசே காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயிலாகும். தூல இலிங்கமாகிய இராசகோபுர எழிலுடனும், அடியார்களின் மனக் கோயிலாகவும் விளங்கும் இந்த ஈழத்துச் சிதம்பரத்தின் 2026 ஆம் ஆண்டு பெருந்திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில், உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டு, அன்னை திருவுடைநாயகி (சௌந்தராம்பிகை) உடனுறை சுந்தரேசுவரப் பெருமானின் திருவருளையும், ஆண்டிகேணி ஐயனாரின் பேரருளையும் பெற்றுய்யுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"**

**திருச்சிற்றம்பலம்**

**படங்கள் - ஈழத்துச் சிதம்பரம் நூல்**

# காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
# திருக்குட நன்னீராட்டிற்கு முன்னர் - 2022














# காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
# திருக்குட நன்னீராட்டிற்கான தயார் நிலையில் - 2026













# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**பாடல் - 49 திருநகரச் சிறப்பு**

**பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயி லமர்ந்தபிரான்**
**வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்**
**சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்கு**
**என்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும்**

**பொருள்:-** அழகிய மதில்சூழ்ந்த திருவாரூரிலே பூங்கோயிலிலே எழுந்தருளிய இறைவன் வெற்றி பொருந்திய மனுச்சோழருக்குத் திருவீதியிலே காட்சி தந்து தனது பேரருளையும் கொடுத்து எழுந்தருளிய கருணைத் திறத்தைக் கண்டு அவ்விறைவன் என்றும்



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

இவ்வாறே அடியவர்களுக்கு எளிதாக வெளிவந்து அருள்புரியும் பெருமையை ஏழுலகங்களும் எடுத்துத் துதிக்கும்.

**விளக்க உரை:-** பொன்தயங்குமதில் – அழகினால் ஒளி வீசும் மதில்

**பூங்கோயில்** - திருவாரூர்த் திருக் கோயிலின் பெயர் பூவின் அகமலர் போன்று இருத்தலின் பூங்கோயில் எனப்பட்டது. எப்பொழுதும் பூக்களால் பந்தலிடப்பட்டிருத்தலால் பூங்கோயில் என்பாரும் உளர்.

**வீதியிலே அருள்கொடுத்துச் சென்றருளும் பெரும் கருணைத்திறம்:-** அரசன் தேர் ஊர்ந்தது கண்டார், அரசகுமாரனும் கன்றும் எழுந்ததையும் கண்டார். இவற்றிற்கு காரணமாய் இளம்பிறையும் திருநுதலும் கொண்ட கோலத்தைக் கண்டு அரசன் போற்றப் பெருமான் கொடுத்த அருளையும் கண்டார். ஆதலின் பெருங்கருணைத் திறம் கண்டு என்றார்.

**“முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ”**

என்ற இடத்தும் காணலாம்.

**தன் அடியார்க்கு என்றும் எளிவரும் பெருமை:-** “அடியவர்க்கு எளியானை” “அடியார்க்கு அடியன் சிற்றம்பலவன்” என்ற வாக்குகளாலும் மேலும் சரிதத்தில் நம்பிகளுக்காக இறைவன் பறவையாரிடத்திலே தூது சென்றதும், இறந்து கொண்டு வந்து அமுது கொடுத்ததும், அப்பர்சாமிகளுக்கு இறைவன் திருப்பைஞ்ஞீலியில் பொதிசோறு கொண்டு வந்து கொடுத்தது முதலான அருள் நிகழ்வுகளால் காணலாம்.

**ஏழுலகும் எடுத்தேத்தும்:-** இவ்வரிய செயலை

சிலப்பதிகாலம், மணிமேகலை போன்ற பழந்தமிழ்ப் பெருநூல்கள் எல்லாம் விதந்து எடுத்துப் பேசும்.

**"அரும்பெயர்ப் புதல்வனை ஆழியின் மடித்தோன்"**

**- சிலப்பதிகாரம்**

**"கறவை முறை செய் காவலன்" - சிலப்பதிகாரம்**

**"மகனை முறை செய்த மன்னன்" - மணிமேகலை.**

சைவசித்தாந்த சாத்திர நூல்களிலும் எடுத்துப் பாராட்டியமை காணலாம்.

பெரியபுராணம் தோற்றுவதற்குக் காரணமாய் இருந்தது அநபாயரது தருமமும் – நீதியும் – சால்புமே ஆதலின் அவர்க்கு வழிமுதல்வராய் நீதி போற்றிய மனுச்சோழர் செய்தியை **"மன்னுசீர் அநபாயன் வழிமுதல்"** என்று போற்றினார் ஆசிரியர்.

**பாடல்கள் - 50**

இணையவகை அறநெறியில் எண்ணிருந்தோர்க்கு அருள்புரிந்து

**முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்**
**புனையுமுரை நம்மளவில் புகழலாம் தகைமையதோ?**
**அனையதனுக்கு அகமலராம் அறவனார் பூங்கோயில்**

**பொருள்:-** இவ்வாறு அறநெறியிலே அளவிலாத உயிர்களுக்கு அருள்செய்து யார்க்கும் முன்னவனாகிய வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி வீற்றிருந்தருளும் பழமையாகிய அந்நகரத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது நமது அளவுபட்ட சொல்லாற்றலில் அடங்குமா? அடங்காது. அந்நகரினுக்கு அகமலர் போல் விளங்குவது அறவனாராகிய இறைவன் எழுந்தருளிய பூங்கோயில் எனும் திருக்கோயிலாம்.

**அறநெறியில்:-** அறநெறியில் நின்று உய்யுமாறு என்க. இங்கு அறம் எல்லா அறங்களையும் உள்ளிட்டது இறைவன் இங்கே அரசராக (தியாகராசர்) எழுந்தருளி இருத்தலால் அரசனாவான் இறவைனும் அநநெறியில் அருள் புரிந்து மகிழந்து வீற்றிருக்கின்றார் என்பதாம். நீதியே இறைவன் திரு உருவங்களில் ஒன்றாதல் முன்னர் குறிக்கப்பட்டது. **"அறவனார் அடிசென்று சேர்வதற்கு"** என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரமும் காணலாம்.

**எண்ணிறந்தோர்க்கருள்:-** உயிர்கள் பலவாதலால் எண்ணிறந்தோர்க்கு என்றார். உயிர்கள்தோறும் அவ்வவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்று இறைவன் செய்யும் அருளும் பலவாதலின் எண்ணிறந்த உயிர்க்கு எண்ணிறந்த அருள் என்க.

**மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்:-** மகிழ்ச்சியுடன் இனிது வீற்றிருக்கப் பெற்ற பெருமையுடையது. சில நாள் திருப்பாற்கடலிலும், சில நாட்கள் பொன்னுலகத்திலும் எழுந்தருளியிருந்த தியாகேசர் இம் மண்ணுலகத்திலே இந்நகரை விரும்பி நிலைத்து எழுந்தருளியிருக்கின்றார். ஆதலின் இவ்வாறு கூறினார்.

**புகலலாம் தகைமையதோ:-** இதுவரை சொல்லி வந்த அளவிலே திருவாரூர்ச் சிறப்புக்கள் அடங்கிவிடுவன அல்ல. அவை முற்றும் சொல்ல நம்மளவில் அடங்காது என்று எச்சரித்து ஆசிரியர் இப்பகுதியை முடித்துக் காட்டியபடியாம்.


**அகமலர்:-** தாமரையின் பொருட்டே அதன் உயிர்போன்ற பகுதி. அதுபோல திருவாரூரின் நடுவில் அறவனார் பூங்கோயில் உள்ளது. அகமலர் எல்லாரது அகத்தில் (உள்ளத்தில்) மலர்வது என்றும் அகமாகிய மலர் என்றும் கூறுவார். **"மேதினிக் காதல் மங்கை இதயகமலமாம்"** என்றதும் காணலாம். திருவாரூர் நகருக்குப் பழ சிறப்புகள் இருந்தாலும் பூங்கோயில் வீற்றிருப்பதே தலையாய பெருமை என்று ஆசிரியர் பெருமான் போற்றுகின்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம்: பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Thennadu's Mission Continues Beyond our 7th Year

We should start measuring a year not by what we kept, but by what we passed on. A language survives only in the mouth that speaks it next. A tradition lives only in the hands that light the next lamp. As Thennadu steps into its seventh year, the honest test is the same one it has always set itself: are the young carrying this forward, or only the old?

This question sits close to home. Across Jaffna, across Sydney, across every city where Tamil families have settled, we have built temples, halls and schools with real sacrifice. Our elders did this while rebuilding their own lives, often with little. They did not wait for comfort before they served. That example should shame us out of any complacency, because the inheritance they protected is now ours to keep or to lose.

It is easy to assume the work is done. The buildings stand. The festivals run on schedule. The classes have teachers. But a culture is not a building. It is a living thing, and living things need feeding. A child who can recite a Thirumurai verse but cannot tell you what it means has been given the shell and not the seed

This is the standard Thennadu has tried to hold to from the start. When we first started in Jaffna, it was never meant to be only a single institution. It was built to protect the Tamil language and the Saiva tradition and to carry them, through forms such as media, to the next generation. It follows the strict and ancient traditions of pure Saiva Tamil, the path of worship and learning handed down to us through the centuries, and it holds to them deliberately because these are exactly the traditions we want to carry on rather than let fade. From that root, it has grown branches across the regions of Sri Lanka and beyond, teaching spiritual wisdom in the way of pure Tamil, building Tamil Temples with Tamil worship, lifting the dignity of temple life, and standing with the community. Service and learning are not two separate duties here. They are the same duty seen from two sides.

There is also a duty that falls on the young in particular, and it is not a small one. We are the generation most able to carry this heritage across borders, because we move easily between worlds. It would be the simplest thing to let the Tamil Saiva traditions thin out, one generation softer than the last, until it becomes a flavour rather than a language. The harder and better path is to hold both fully, to be at home in the new country without becoming a stranger to the old one.

None of this happens by sentiment alone. It happens through ordinary, repeated effort: daily prayers, living your day-to-day life properly, and always questioning why things are the way they are. These are the quiet acts that have carried Thennadu this far, and they are the only acts that have ever kept a culture breathing.

So as Thennadu marks its seventh year, the right response is not celebration but resolve. The lamp was handed to us still lit. Our task is plain. Keep it burning, and place it carefully in the hands that come after.

# Saiva Saint Sandeswarar - The wealthy





Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

The Periya Puranam places the nineteenth of the sixty-three saints on the banks of the river Manni, in Saigalur, and it gives the land its sanctity before it gives us the glory of the nayanar. The mark of that sanctity is old and exact. On this soil Lord Murugan himself once held worship, and the worship he held was an offering made to fire. The ground was hallowed by a god bent over the flame. It is a land of the sacrifice in the fullest sense, sanctified at its root by the fire rite of the Lord's own son, and settled in its own day by scholars of the Veda who keep that rite at its height.

In Saigalur lived Echadattan and his wife Pavithrai, whose name is the word for the pure. Their son was Vichara Sarma. He had his father's mastery of the Vedic rite, and he had gained beside it a deep knowledge of the Agamas, the science that worships the Divine in a visible form. Of the two he was drawn to the second, and he gave himself to the image of the Lord.

**The son who turned to the image**

One day Vichara Sarma came upon a cowherd beating his cattle without mercy. The cruelty moved him, and he asked to take the herd into his own keeping. The cowherd agreed, and the brahmin grazed the cows with a care they had not known. They answered him in their bodies. Their udders filled and poured milk of their own accord.

He did not carry the milk back to the houses of the andanars. On the bank of river Manni he raised a linga out of the river sand, and he bathed it each day in the milk the cows gave him, and worshipped it with garlands and with the whole of his mind. To the grownups, this was a waste. They went to Echadattan and told him his son was pouring the milk of the herd onto the sand, as though worship were a child's game played at the water's edge.

**A take on permanence**

The form he chose is the centre of the account. The nayanar is named across all twelve of the Thirumurais, and Sundarar, singing of him, calls his hold on the Lord a fixed and permanent thing. Set that against the material he worshipped. He did not raise the Lord in stone or in

bronze, in anything that would stand. He raised him in sand, the least lasting thing on the riverbank, a shape the next current would carry off.

The two facts are meant to be held together. The soul that fastens itself to a form because the form will last is caught in the lasting of it. That is the trap. Vichara Sarma fastened himself to a form that would not last at all, so there was nothing in the worship for him to grip except the Lord. What washed away was the sand. What stayed was the attachment, and because it had no permanent thing to hold, the attachment itself became the permanent thing. He passed through the trap by worshipping what could not be kept.

The Periya Puranam grants very few the name of the Lord's own child, and it grants it directly to only two of the sixty-three. One is Thirugnana Sambandar, fed at the breast of the Goddess. The other is this brahmin of the riverbank. Sambandar is made the child in infancy and in tenderness, taken up before he could speak. Vichara Sarma is made the child in his bravery and in innocent violence.

**The test**

Much dwells around Echadattan. Hearing the complaint, the father did not believe it until he saw it. He came to the grazing ground and watched from a high up hiding place. He saw the milk of the herd poured over a shape of sand. He came out and beat his son with a stick, and the son did not feel it, because he was inside the worship and could not be reached from outside it. The father's anger broke past its bounds. He kicked over the pot of milk set apart for the Lord.

The father is often comparable to a serpent, and the comparison has to be read in its vernacular sense, definitely not as plainly as an insult. The serpent is the one body that carries the venom and the cure in the same flesh. Its bite is death, and from the same creature comes the elixir that draws out illness. Echadattan is that. He is the venom to the worship, the hand that strikes the worshipper and defiles the offering. He is also the source of the worshipper, the man without whom there is no Vichara Sarma and no devotion on the bank of the Manni at all.

Until the milk is struck the son bears every blow in silence. When the offering is finally ruined, he reaches for a stick lying near him and strikes at his father's leg not knowing the identity of the perpetrator who is interrupting Siva worship. The stick becomes an axe in his hand, and the axe takes both the father's legs. He does not stop to remember whose legs they are. To raise a hand against the father is the gravest act a man of his vedic birth can commit, and he commits it without a moment's weighing, because in that moment there is nothing left standing in him above the Lord. It is a firm Saivite belief that the one who turns a blind eye during a disruptive act to a Sivanadiyar, is as guilty as the perpetrator.

In the same instant the Lord stands before him. He tells the saint that since he has felled his own father for the Lord's sake, the Lord will be his father from this day, and his mother as well. He sets a garland of kondrai flowers on him. He gives him the post of Chandesar among the

immortals, the keeper of everything offered to Shiva, the food and the cloth and the garlands and the jewels. The brahmin child who poured milk onto sand is made the holder of the Lord's whole wealth.

**What the account is for**

Periyapuranam finds its way to enforce this fundamental morale of not showing a blind eye, a flexibility almost, within contemporary humanity. Common practices such as clapping thrice in front of Sandeswarar at temples is also debated widely and diversely across the Tamil speaking parts. It is a popular belief that one claps to show that their hands are devoid of any possessions of the temple, signaling that nothing is being taken from the temple and that the prayer is genuine.

The experience of during a half circumambulation for Sandeswarar and the confusions that follow when completing the parivara shrine visits is a classic in daily temple visits for all Saivites and it is an important ritual that keeps us in realisation of reality, enticing us to apply the same scrutiny to our personal lives too. Sandeswarar is remembered daily and most specially year on year on his kuru pusai day of Thai Uthiram.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆதார சுருதி உரையானது இரண்டு சிந்தனைகளை உங்களுக்கு முன்வைக்கின்றது. ஒன்று நம்முடைய மரபானது அல்லது தமிழர் தத்துவ மரபு என்று சொல்லப்படுகின்ற சைவசித்தாந்தம் எப்படிப்பட்ட சிந்தனையை உலக அளவில் தற்கால சூழமைவை எதிர்கொள்கிறது. அல்லது தற்கால சூழமைவிற்கு எப்படி தன்னுடைய கருத்தியலை வழங்கியிருக்கிறது என்பதனை நாம் தெரிந்து கொள்கின்ற ஒரு அடிப்படை வரலாற்றையும், நம்முடைய கருத்தியல் அல்லது கொள்கை விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என்னுடைய இரண்டு வகையான செய்திகளாக அமையும்.

(கடந்த திங்கள் தொடர்ச்சி)

தொல்காப்பியத்தில் சேயோன் என்று சொல்லப்பட்டதைச் **‘சேய்’** என்று சொல்லுவது ஒரு வகை. ஆனால் அதிலே ஆராய்ச்சி உண்டு. சேய் என்று முருகனை முதன்முதலாக அதாவது முருகனைத் தன்னுடைய நூலில் முதன்முதலாக எந்தப் பெயரில் அடையாளப்படுத்தலாம் என்று நக்கீரர் நினைத்துப் பேசினார் என்று கேட்டால் **‘சேய்’** என்பதாக அளபடையில் அதை அறிமுகப்படுத்தி இருப்பார். அதுதான் சமசுகிருதத்தில் ‘குமாரன்’ என்பதாக நிற்கிறது. அது இளமை ஆயுதம் தாங்கிய வகையில் ‘வேலன்’ என்பதாகப் பேசப்பட்டு அதுவும் கொற்றவையும் தான் வெட்சித் திணையில் பேசப்பட்டது கடவுள் வரலாற்றில். அதோடு கூட சமிக்ஞைக் குறிப்பு உணர்ச்சியாகக் ‘கந்து’, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பதாகப் பேசப்பட்டது. கொடிநிலை என்பது தாய்வழி உரிமையினுடைய அடையாளம்.



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

கந்து என்பது அந்தக் கடவுள் சமிக்ஞையான ஒரு அடையாளம். அதற்குப் பிறகு வள்ளிக்கொடை ஆற்றலின் அடையாளம். இப்படி மூன்றையும் கடவுள் என்கின்ற ஒரு உணர்ச்சி சார்ந்து இந்தத் தமிழ்ச் சமூகம் அடையாளப்படுத்தியதைத் தொல்காப்பியம் தெளிவுபடுத்தி இருக்கின்றது. கடவுள் என்ற சொல்லையும் சொல்லி இருக்கிறது. கடவுள் என்ற கொள்கையை அது **“ஒன்றே வேறே என்று இரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பாலது ஆணையன்”** என்று விரிவாகப் பேசி இருக்கிறது. பால்வரை தெய்வம் என்று மூன்று சொல்லையும் இணைத்து அதைக் கடவுளாகச் சுட்டி இருக்கிறது. இப்படி நிறைய ஒரு அப்பாலைப் பொருள் தன்மையில் தொல்காப்பியமே ஒரு புலன்கடந்த பொருளியல் தன்மையில் கடவுள் விளக்கத்தை வரையறுக்கிறது. இவைகளை நீங்கள் தனியாகப் புரிந்துகொள்வது ஒருவகை. இங்கே அறிமுகத்திற்காக நான் இவற்றைக் குறிப்பிட்டேன்.

ஆனால் நாம் பேசவந்தது தமிழ் சமூகத்தின் வழிபாட்டில் சொல்லப்பட்ட ஒரு அடையாளம் கடவுள் என்ற வகையில் முருகன் நமக்கு மிக முக்கியமான ஒரு அடையாளமாக இருக்கிறார். தலைமையான அடையாளமாக இருக்கிறார். கடவுள் என்ற பெயராலேயே சொல்லப்பட்ட ஒருவராகவும் இருக்கிறார். அந்த முருக அடையாளம் அனைத்து நிலங்களுக்கும் தெய்வம் என்பதை சொல்கிறது திருமுருகாற்றுப்படை. அதே நேரத்தில் அனைத்து மக்களுக்குமான தெய்வம்

என்பதையும் ஆவினம்குடி சார்ந்தும் பேசுகிறார், ஏரகம் சார்ந்து பேசுகிறார. **"அந்தணர் வெறுக்கை"** என்பதாக அந்தணர்களுக்கே செல்வமாக இருக்கிறவன் என்று பேசுகிறார் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில். அவர் தான் இரண்டு செய்திகளை பேசுகிறார். **"பெரும் பெயர் இயவுல்"** என்றும் பேசுகிறார். இந்த பெரும் பெயர் இயவுல் என்றும் உருணியாக தோன்றிய பெரலரும் பரிசு தரல்கிற கடவுள் என்றும் திருமுருகாற்றுப்படை தலைமைப்படுத்துகிறது முருகனை.

அது குறிஞ்சி நிலமும் கடல் சார்ந்த திருச்சீரலை வாயையும் சொன்னதோடு கூட மருதம் சார்ந்த இடத்தையும் திருகேரகத்தையும் மற்ற இடங்களையும் குறிப்பிடுகிற காலத்தில் ஆவினம் குடியையும் குறிப்பிடுகிற காலத்தில் உங்களுக்கு முல்லை, மருதம், நெய்தல், பாலை என அனைத்து நிலங்களோடும் கூட புதும்பூங்கடம்பு தொடங்கி அனைத்து இடங்களிலேயும் இருக்கிறவன் அதே நேரத்தில் குன்று தோறும் இருக்கிறவன் என்பதாகப் பொதியில் என்ற அடையாளத்தோடு கூட அனைத்து இடங்களையும் தொல்பழங்கால குடிமக்கள் குடிமக்கள் குறவர் வழிபாடு தொடங்கி எல்லா வரலாறுகளோடும் முருகனை இணைத்து ஒரு கோயில் உருவாக்கத்திற்கான முன்னோடி என்கிற வகையிலும் திருமுருகாற்றுப்படை முருக வழிபாட்டைத் தொகுத்துக் கூறுகிறது. இந்த முருக வழிபாட்டினுடைய தொகுப்புக்குப் பிறகு அந்த முருக வழிபாடு சார்ந்து

சொல்லப்பட்ட **'இயவுல்'** என்கிற கருத்தாக்கத்தை எடுத்துக்கொண்டு சமசுகிருத மரபில் வைதீகத்துக்கு எதிரான உருத்திரன் நல்லவன் என்பதாக ஒரு பண்புப்பெயரால் சிவ என்பதாக சொல்லப்பட்டதை எடுத்துக்கொண்டு காரைக்கால் அம்மையார் **"சிவகதி நல்கதியை அடையலாம்"** என்பதைச் சொல்லி ஈசன் என்பதைச் சொல்லி சமசுகிருத மரபில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுளைத் தமிழ் மரபு சார்ந்து மேய்ச்சல் அடிப்படையில் ஆண் சமூகத்தினுடைய தலைமைத்தன்மையில் அடையாளப்பட்டிருந்த ருத்திர மரபை சிவ மரபாகச் சமசுகிருதம் அல்லது வைதீகம் பதிவு செய்துகொண்டிருந்த நிலையில் அதனையும் தமிழ் மரபில் சொல்லப்பட்ட கடவுள் வழிபாட்டின் நுட்பமான 'இயவுல்' என்பதனையும் இணைத்து காரைக்கால் அம்மையார் கடவுள் கொள்கையை **'ஈசன்'** என்பதாகச் சொல்லி 'சிவகதி' என்பதாக அடைகிற கதியைப் பேசி ஒரு இயக்கத்தை நமக்கு சைவம் என்கிற சிவம் என்கிற தலைமை அடையாளத்தோடு கூட தொடங்குகிறார். அதன் பிறகுதான் கலித்தொகையினுடைய கடவுள் வாழ்துப் பாடலும் மணிமேகலை சுட்டுகிற **'சைவாதி'** என்கிற விளக்கங்களும் அமைகின்றன. இது தொல்லியல் வரலாறும் சொல்லுகிற உண்மை. நீங்கள் இதை இன்னும் கூடுதலாக ஆய்வு செய்யலாம்.

அடுத்த செய்தி என்னவென்றால் இந்தக் காரைக்கால் அம்மையார் எந்த அடிப்படையில் சைவத்தை நிலை நாட்டினார் என்று கேட்கும்போது மிக முக்கியமான ஒரு அடிப்படையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் அவர் சொன்ன மிக முக்கியமான ஒன்று

**"அவனே இருசுடர்தீ ஆகாசமாவான்**
**அவனே புவி புனல் காற்று ஆவான்**
**அவனே இயமானனாய் அட்டமூர்த்தியுமாய்**
**ஞானமயமாகி நின்றானும "**

என்கிற பாடல் மிக முக்கியமமானது

இவர்கள் இங்கே இதுவரை இருந்த வழிபாட்டு அடையாளங்களை எல்லாம் அதிலே அவர்கள் இணைக்கிறார்கள். அதனைத் தொடர்ந்துதான் காரைக்கால் அம்மையார் இன்னொரு குறிப்பையும் கொடுக்கிறார். வைதீக மரபு நூல்களை காரைக்கால் அம்மையாருக்கு முன்னதாக செய்துவிட்டது. இந்த செய்துவிட்ட வைதீக மரபு ஒரு திட்டவட்டமான அடிப்படையை மேற்கொண்டிருக்கிறது.

இன்றைக்கும் அது ஒரு சிக்கலான பார்வையை வழங்கிக்கொண்டிருக்கிறது. அதுதான் 'சனாதனம்' என்கிற சொல்லால் சொல்லப்படுகிறது. அதை இன்னும் கூடுதலாகத் தமிழ் மரபிற்குப் புரிந்துகொள்ள வேண்டுமானால் திருஞானசம்பந்தர் அதை **'மாறா மறை'** என்று சொல்கிறார். 'மாறா மறை' என்று சொல்வதற்கும் நிகழ்கால உலகமயமாதல் சூழமைவு என்பதை நாம் சிந்திப்பதற்கும் ஒரு வேறுபாடு அந்தச் சொல்லாடல்கூட நமக்கு மாறாத தன்மையில் இல்லாத ஒரு போக்கை நாம் எப்படி உணர்ந்துகொள்வது என்பதை ஒரு சவாலாக அல்லது இந்தச் சமூகத்திற்கான அறைகூவலாக ஏற்று நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை அது உணர்த்துகிறது. அப்படியானால் திருஞானசம்பந்தர் 'மாறா மறை' என்று சொன்ன அந்தத் திருவிழிமிழலைப் பதிகத்தினுடைய போக்கு காரைக்கால் அம்மையாரால் திருஞானசம்பந்தருக்கு முன்னதாகவே எதிர்கொள்ளப்படுகிறது.

**(தொடரும்...)**

**திருச்சிற்றம்பலம்**



# சிவகணங்களுக்கு தலைவராகி, ‘சண்டீசன்’ பதவி பெற்று, எம்பெருமானின் பேரன்பைப் பெற்ற சண்டேசுவர நாயனார்



சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி

சிவபூசையின் பயனை வழங்கக் கூடிய பதத்தை தன்னகத்தே கொண்டு, எப்பொழுதும் இறைவன் மீது கொண்ட திருவடிப் பற்று விடாது வழிபாடு செய்து சிவனன்றி வேறாரும் சிந்தையில் நுழையாமல் போற்றி வந்த சேயலூர் பிள்ளையார் என பெரியபுராணத்தில் போற்றப்பட்ட விசாரசருமரை “அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்” என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனார் புகழ்ந்துள்ளார்.

இவர் சோழ வள நாட்டில் மணியாற்றங்கரையில் சேய்ஞலூர் என்னும் ஊரில் அந்தணர் குலத்தில் எச்சத்தன், பவித்திரை எனும் தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். பெற்றோர் இவருக்கு விசாரசருமர் என்று திருப்பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர்.

விசாரசருமர் சிறுவயதிலேயே வேத அறிவில் சிறந்து விளங்கினார். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றுணர்ந்து அவரைப் போற்றி எப்பொழுதும் சிவ சிந்தையிலேயே இருப்பார். இவருக்கு ஏழாம் வயதில் அந்தணர் குல மரபின்படி உபநயனம் செய்யப்பட்டது.

ஒருநாள் மறை ஓதும் மழலையர்களுடன் விசாரசருமர் விளையாடிக் கொண்டிருந்த போது, பசுக்களை மேய்ந்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனை, கன்றை ஈய்ந்த ஒரு பசு அச்சிறுவனைக் கொம்பினால் முட்டப்போயிற்று. கோபம் கொண்ட அச்சிறுவன் தன்கையிலுள்ள தடியால் அப்பசுவை அடித்தான். அதைக் கண்டு கவலைகொண்ட விசாரசருமர் அச்சிறுவனைத் தடுத்து வெண்ணை, பால், தயிர் போன்ற உயிரமுதங்களை ஈன்ற பசு தாய்க்கு சமானம்.

திருநீறு, பஞ்சகவியம் என்ற அனைத்தையும் நமக்கு தரும் பசு தெய்வத்திற்கு ஈடு. பசுவினது உடலில் தெய்வங்களும் தேவர்களும் வசிக்கின்றனர் என்ற பசுவின் மேன்மையான பேருண்மைகளை எடுத்துத்துரைத்தார். பின்பு, தானே பசுக்களை மேய்க்கும் பொறுப்பினை ஏற்றார்.

பசுக்களின் மேன்மையை உணர்ந்த விசாரசருமர் தினசரி காலையில் மணியாற்றங்கரையின் வளமான புல்வெளியில் அவைகளை மேய விட்டும், நல்ல நீருள்ள நீரோடைகளில் நீர் அருந்தச் செய்தும் அவற்றைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து மறையவர்களின் வீட்டில் கொண்டு சென்று விட்டு வந்தார். பசுக்கள் முன்பை விட நிரம்பப் பாலைப் இவரைக் கண்டதும் தானாக பொழிந்தன. பால் பெருகுவதை கண்டவர் ஈசனுக்கு திருமஞ்சனம் செய்யும் ஆவல் கொண்டார்.

சிறு வயதிலேயே சிவ பத்தி மேலோங்கி இருந்ததால்,

மாடு மேய்க்கும் தொழில் செய்கையில் பணிக்கு இடையே மணியாற்றங்கரையின் மணலினால் சுற்று மதில் அமைத்து கோயில் போல உருவாக்கி நடுவிலே சிவலிங்கத்தை நிலைப்படுத்தினார் என்பதனை சேக்கிழார் திருத்தொண்டத் தொகையில்,

**அங்கண் முன்னை அர்ச்சனையின்**
**அளவின் தொடர்ச்சி விளையாட்டாய்**
**பொங்கும் அன்பால் மண்ணிமணற்**
**புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்**
**செங்கண் விடையார் திருமேனி**
**மணலால் ஆக்கிச் சிவாலயமும்**
**துங்க நீடு கோபுரமுஞ் சுற்றா**
**லயமும் வகுத்தமைத்தார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:20:32)**

என மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

அச்சிவலிங்கத்திற்கு பாலால் திருமஞ்சனம் செய்து, இலைகளால் கொண்டு பூசைகள் ஆற்றி மகிழ்ந்தார். அவ்வாறே தொடர்ந்து நாள் தோறும் சிவபூசையும் திருமஞ்சனமும் நடத்தி வந்தார். இதனைக் கண்ட ஒருவன் ஊருக்குச் சென்று பசுவின் சொந்தக்காரர்களிடம் விசாரசருமர் பாலை வீணாக்கித் தரையில் கொட்டுகின்றான் எனப் பழி கூறினான். இதனை கேள்வியுற்ற மாட்டின் சொந்தக்காரர்கள் பால் வீணாவதாக உணர்ந்து, விசாரருமரின் தந்தையான எச்சதத்தனிடம் மகனை கண்டிக்கும்படி அறிவுறுத்தினார். எச்சதத்தனும் தன் மகன் செய்த தவற்றிற்கு மன்னிப்பு வேண்டி தன் மகனைத் தண்டிப்பதாகக் கூறினார்.

மறுநாள் மாடு மேய்க்க சென்ற விசாரசருமர் அறியாதவாறு எச்சதத்தன் பின் தொடர்ந்து மரத்தின் மீது ஏறி உட்காட்ர்ந்து நடப்பவற்றை பார்த்தார். விசாரசருமரும் வழக்கம் போல மணியாற்றில் நீராடி சிவலிங்கத்தை நிலைப்படுத்தல் செய்து, மலர்களை தொடுத்து மாலையாக் கட்டி குடங்களில் பாலைச் சேர்த்துக் வைத்துக் கொண்டு சிவபூசையைத் தொடங்கினார். மகனின் வழிபாட்டு முறையைக் கவனித்துக்கொண்டிருந்த எச்சதத்தனுக்கு ஊரார் சொன்னது சரியே என கோபங்கொண்டு, மரத்தில் இருந்து வேகமாக குதித்து வேகமாக சென்று தன் கையிலுள்ள பெரிய கோலால் விசாரசருமர் முதுகில் ஓங்கி அடித்தார்.

விசாரசருமர் உள்ளார்ந்தமாக சிவபூசையில் ஈடுபட்டிருந்ததால், எச்சதத்தன் அடித்ததை கூட உணரவில்லை. மண்ணினால் ஆன இலிங்கத்திற்கு திருமஞ்சனம் செய்து பால் வீணாக்குவதை கண்ணுற்ற தந்தை சினம் மிகுந்து, கடுமையாக திட்டினார், அதையும் சண்டேசுவரர் உணரது சிவபூசையில் செய்து கொண்டு இருந்ததால், எச்சதத்தன் கடுங்கோபங்கொண்டு, பால் குடங்களையும் பூசை பொருட்களையும் எட்டி உதைத்தார். பூசைக்கு இடையூறு விளைந்த போது தான் திரும்பிப் பார்க்கிறார் விசாரசருமர்.

அங்கு சிவனுக்காக கறந்து வைத்திருந்த பால் முழுவதும் சிந்தியது. அதனைக் கண்டதும் விசாரசருமர் சிவ குற்றம் செய்த தந்தையை தன்னருகில் இருந்த குச்சியை எடுத்து, பாலை உதைத்த எச்சதத்தனின் கால்களை நோக்கி அடிக்க சிந்தித்த போது, குச்சியானது மழுவாக மாறி தந்தையை நோக்கி சென்று எச்சதத்தனின் இரண்டு கால்களையும் வெட்டியது. எச்சதத்தன் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

**எறிந்த அதுவே அர்ச்சனையில்**
**இடையூ றகற்றும் படையாக**
**மறிந்த தாதை இருதாளும்**
**துணித்த மைந்தர் பூசனையில்**
**அறிந்த இடையூ றகற்றினராய்**
**முன்போல் அருச்சித் திடப்புகலும்**
**செறிந்த சடைநீள் முடியாரும்**
**தேவி யோடும் விடையேறி**
**(திருத்தொண்டர் புராணம் 12:20:52)**

நடந்ததை எதுவும் கவனம்கொள்ளாமல், மீண்டும் சிவலிங்கத்தைப் பூசிப்பதில் கவனம் செலுத்தினார் விசாரசருமர். பத்தியில் கட்டுண்ட சிவபெருமான், சிவபெருமான் உமையோடு இடப வாகனராய் தோன்றினார். அப்போது சண்டேசுவரர் இறைவன் திருவடியில் வீழ்ந்த போது அவரை அணைத்து எம்மீது கொண்டிருந்த பத்தியால் உன்னை ஈன்றதந்தையையே வெட்டி சாய்த்த உமக்கு இனி நானே தந்தை என்று கூறி உச்சிமுகந்து மகிழ்தார். இறைவன் திருக்கையால் தீண்டியதால் மாய உடம்பு சிவகரண மாகியது.

தனக்கு சமர்ப்பிக்கும் அனைத்திற்கும் உரியவனாகும் சண்டீசன் பதவி அளித்து, தமது தொண்டர்களுக்கு தலைவனாக்கி, தன்னுடைய திருமுடியில் இருந்த கொன்றை மாலையை விசாரசருமருக்கு அணிவித்தார். சிவ குற்றம் செய்ததாலும், சண்டேசுவர பெருமானின் மழுவினால் தண்டிக்கபட்டதால் பாசம் நீங்கப் பெற்று சிவலோகம் சென்றார்.

இவரது குருபூசை தைத் திங்கள் உத்திரம் நாண்மீனில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. ஏகனாகி இறைவன் பணியில் செய்தால் மலம் நீங்கும் என்ற உண்மையை தனது வாழ்வியல் அனுபவத்தூடாக எடுத்துக்காட்டி, இறைவனின் பிள்ளையாகி திருக்கோயில் வழிபாட்டின் பலனை வழங்குபவர் சண்டேசுவர பெருமான்.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஆறாம் ஆண்டு நிறைவும் ஐம்பூதநாதர் சங்குநீராட்டும்



பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் **"தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்'** அமைகிறது.

அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடு டைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழ் ஆகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற் கேற்றால் போல் செந்தமிழ் ஆகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலைமாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசைகள், சிவமங்கல நீராட்டுகள், திருக்குட நன்னீராட்டுகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், அருள்மிகு மனோன் மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திரு நிலைப்படுத்தப்பட்டு, ஆறு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித் திங்கள் பதினைந்தாம் நாள் (29-05-2026) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இறையருளோடு நடந்தேறியுள்ளது.

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

**அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி**
**வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி**
**உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி**
**ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி**
**ஐம்பூதநாதரே போற்றி போற்றி**

## 2024ஆம் ஆண்டு நிகழ்வுகள்
**(சென்ற திங்கள் இதழின் தொடர்ச்சி)**

07-05-2024: பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்களினால் கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதர் மீது போற்றிப் பதிகம் இயற்றப்பட்டு, கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து, மடத்தின் முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

09-05-2024: கனடா ரொறன்ரோ மாநகரில் ஞானச்சந்திரன் - கார்த்திகா இல்லப் பசுபதிநாதப் பெருமானுக்குச் சிறப்புப் பூசைகளும், அன்னாரின் தாயார் திதி வழிபாடும் செந்தமிழ் ஆகம முறையில் மடத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்றன.

13-05-2024: தென்னாடு சிவமட முதல்வர் அமெரிக்கா வின் கவாய் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் அமைந்துள்ள இறைவன் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றி, கவாய் சைவ ஆதீன தம்பிரான் சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றார். ஆதீனம் சார்பில் தென்னாடு நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

22-05-2024: மனோன்மணி அம்மை உடனுறை ஐம்பூதநாதர் திருக்கோயிலின் நான்காவது ஆண்டு நிறைவு சங்குநீராட்டு வழிபாடுகளைத் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஒளியகம் ந. ஒளியரசு ஐயா ஆற்றி வைத்தார்.

23-05-2024: அயர்லாந்தில் முருகனுக்குக் கோயில் அமைத்துச் செந்தமிழ் வழிபாடு ஆற்றிவரும் சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்களுக்கு ஒளியரசு ஐயா அவர்களால் நோன்மை (விசேட) தீக்கை வழங்கப்பட்டு, 'தென்னரசு' என்ற தீக்கை நாமமும் சூட்டப்பட்டது. அன்றே நிறைமதி வழிபாட்டுடன் நாற்பத்தைந்தாவது (45) இதழும் வெளியானது.

21-06-2024: மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் வளாக தெய்வநெறிக் கழகத் தலைவர் தவத்திரு. சிவானந்த சுந்தரானந்த சரஸ்வதி சுவாமிகள், சிவகுரு ஆதீன முதல்வர்

தவத்திரு. வேலன் சுவாமிகள் ஆகியோர் மடத்திற்கு வருகை தந்து வழிபாடாற்றினர். அன்றே நாற்பத்தாறாவது (46) இதழும் ௦௦முழுநாள் கருத்தரங்கு நடைபெற்றது. தருமை ஆதீன தம்பிரான் மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர், சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், நாவலர் பெருமானின் வழிவந்த சிவத்திரு. மங்களேஸ்வரன் யதோட்சயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல அறிஞர்கள் கருத்துரைகளை வழங்கினர்.

20-07-2024: கடகம் நல்லோரையில் நாற்பத் தேழாவது (47) திங்கள் இதழ் வெளியீடு.

03-08-2024: தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த முதுமுனைவர் செந்தமிழ் வேள்விச்சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா மற்றும் அவரது மகன் சிவத்திரு. திருச்சுடர் நம்பி ஆகியோர் ஐம்பூதநாதர் திருக்கோயிலில் வழிபாடாற்றினர்.

19-08-2024: மடங்கல் நல்லோரையில் நாற்பத் தெட்டாவது (48) இதழ் நிறைமதி வழிபாட்டுடன் வெளி யானது.

01-09-2024: கிழக்குப் பல்கலைக்கழக ஆலடி சித்தி விநாயகர் திருக்கோயில் திருப்பணிக் குழுவினர் மற்றும் தமிழ்நாடு திருக்குடந்தை இறைநெறி இமையவன் ஐயா ஆகியோர் ஐம்பூதநாதர் வழிபாட்டில் கலந்து கொண்டனர். திருப்பணிக் குழுவினருக்குக் கௌரவிப்பு செய்யப்பட்டது.

09-09-2024: ஒளியரசு ஐயா அவர்களினால் மூன்று அடியார்களுக்குச் சமய தீக்கையும், ஒருவருக்கு விசேட தீக்கையும் வழங்கப்பட்டது.

12-09-2024: சைவ மாணவர் சபையினால் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட அருள்மிகு கயிலைநாதப் பெருமான் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

17-09-2024: கன்னி நல்லோரையில் நாற்பத்தொன்ப தாவது (49) இதழ் நிறைமதி வழிபாட்டுடன் வெளியானது.

26-10-2024: மடத்தின் பணிகளுக்குப் பெரும்பங் களிப்பு வழங்கும் ஒசுத்திரேலியா வாழ் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின் 60வது அகவை நாளை முன்னிட்டு வாழ்த்துக் காணொளி வெளியிடப்பட்டது.

15-11-2024: துலை நல்லோரையில் ஐம்பத்தொன்றா வது (51) இதழ் வெளியீடு.

05-12-2024: திருவாவடுதுறை ஆதீனப் பேராசிரியர் கோவை மீ. சிவசண்முகம் ஐயா, கலாநிதி சு. உமாமகேஸ்வரி அம்மையார் உட்பட 75 அடியார்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்து வழிபாடாற்றினர்.

09-12-2024: கொக்குவில் இந்துக் கல்லூரி அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின் முதலாம் ஆண்டு சங்குநீராட்டுப் பெருவிழாவைச் செந்தமிழ் அர்ச்சகர் தவத்திரு. உயிரொளிசிவம் பிரதாபனார் ஐயா ஆற்றி வைத்தார்.

15-12-2024: நளி நல்லோரையில் ஐம்பத்திரண்டாவது (52) இதழ் வெளியீடு.

22-12-2024: அமரர் சிவதமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் நினைவாகத் திருவாசகப் பேச்சுப்போட்டித் தேர்வுகள் சிவமடத்தில் நடைபெற்றன.

25-12-2024 (மார்கழிப் பெருவிழா - 2024):



நான்காவது ஆண்டாக மார்கழிப் பெருவிழா பிரமாண்ட மாக நடைபெற்றது. இம்முறை யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலமாக எடுத்துவரப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டது.

26-12-2024: யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. பழனி ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு. சாது சண்முக அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர் முனைவர் கோ. ப. நல்ல சிவம் ஐயா, தென்னாடு முதல்வர் ஆகியோர் கருத்துரை களை வழங்கினர். 200க்கும் மேற்பட்ட அறநெறி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

27-12-2024: ஈழநாட்டு தேவாரத்தல யாத்திரைக்கு வருகை தந்திருந்த தருமையாதீன குருமகாசந்நிதானம் அவர்களைத் திருகோணமலை மற்றும் திருக்கேதீச்சரத்தில் மடத்தின் நிர்வாகிகள் சந்தித்து ஆசி பெற்றனர்.

## 2025ஆம் ஆண்டு நிகழ்வுகள்

08-01-2025: சாவகச்சேரி அருள்மிகு வாரிவனேசர் திருக்கோயில் நான்காம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

12-01-2025, 13-01-2025: ஒரே நேரத்தில் ஆடல்வல்லானுக்கும், ஐம்பூதநாதருக்கும் என இரு திருமஞ்சன வழிபாடுகள் நடத்தப்பட்டு, அதிகாலை ஆதிரை அருட்காட்சி வழிபாடுகளும் திருவீதியுலாவும் நடைபெற்றன.

14-01-2025: ஐம்பத்துமூன்றாவது (53) திங்கள் இதழ் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் தென்னாடு இதழ் ஆசிரியர் சிவத்திரு. பார்த்தீபன் கேதாரன் எழுதிய "Unlocking Tamil Heritage" என்ற நூல் துணைவேந்தர் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

15-01-2025 & 26-01-2025: மடத்தின் கோசாலையில் பட்டிப் பொங்கலும், வாதரவத்தையில் பாரம்பரிய பொங்கல் விழாவும் சைவ மாணவர் சபையினால் முன்னெடுக்கப்பட்டன.



01-02-2025: நாடாளுமன்ற பொங்கல் நிகழ்வைச் சாத்தியமாக்கிய கௌரவ அமைச்சர் சிவத்திரு. இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களுக்குப் பாராட்டு கௌரவிப்பு விழா நடத்தப்பட்டது.

12-02-2025: சுறவம் நல்லோரையில் ஐம்பத்து நான்காவது (54) இதழ் வெளியீடு.

25-02-2025: திருக்கேதீச்சரப் பெருஞ்சிவனிரவு விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாட்டு ஓதுவார்களும், தருமையாதீன தம்பிரான் சுவாமிகளும் மடத்தில் வழிபாடாற்றினர். யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சைவ மாணவர் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற சைவக் கருத்தரங்கில் பேராசிரியர் கோவை மீ. சிவசண்முகம் ஐயா உரையாற்றினார்.

26-02-2025 (பெருஞ்சிவனிரவு - 2025): நான்கு சாமமும் நால்வகைத் திரவிய திருமஞ்சனம் மற்றும் நால்வகை இசைச் சமர்ப்பணங்களுடன் ஐம்பூதநாதருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. காலை அடியார்களுக்கெல்லாம் இறையமுது (அன்னதானம்) வழங்கப்பட்டது.

08-03-2025: வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியைச் சேர்ந்த 80 மாணவர்கள் இரண்டு நாட்கள் தங்கியிருந்து ஐம்பூதநாதரைச் செந்தமிழில் வழிபாடாற்றினர்.

13-03-2025: கும்பம் நல்லோரையில் ஐம்பத் தைந்தாவது (55) இதழ் வெளியீடு.

12-04-2025: மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் குடமுழுக்கிற்கு வருகை தந்திருந்த செங்கோல் ஆதீனம் குருமுதல்வர் அவர்களும், தருமை ஆதீன தம்பிரான் மீனாட்சி சுந்தரம் சுவாமிகளும் மடத்திற்கு வருகை தந்து வழிபாடாற்றினர். அன்றே ஐம்பத்தாறாவது (56) இதழும் வெளியானது.

04-05-2025 ௲ 05-05-2025: வட மாகாண சபையில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா வழிபாடுகள் நடைபெற்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்த கயிலைமணி சிவமுருகு இளவேனில் ஐயா இவ்வழிபாடுகளையும் மடத்தின் சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகளையும் ஆற்றி வைத்தார்.

12-05-2025: சித்திரை நிறைமதி அன்று ஐம்பூதநாதருக்குச் சிறப்பு வழிபாடுகளும், தென்புலத்தார் திருவடிப்பேறு வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

10-06-2025, 10-07-2025: முறையே ஐம்பத்தெட்டா வது (58) மற்றும் ஐம்பத்தொன்பதாவது (59) திங்கள் இதழ்கள் நிறைமதி வழிபாட்டுடன் வெளியாகின.

11-07-2025: ஒசுத்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் மனோமோகன் - சிவகௌரி தம்பதிகள் மடத்திற்கு வருகை தந்து வழிபாடாற்றினர்.

14-07-2025: யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபர் திருமதி. லதானந்தினி சிவபாதம் அவர்களின் பதவியேற்பு விழாவில் சைவ மாணவர் சபையினர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

08-08-2025 (ஐந்தாண்டு நிறைவுச் சிறப்பிதழ்): மடத்தின் ஐந்தாண்டு நிறைவை முன்னிட்டு அறுபதாவது (60) சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. மேலும் மடத்தின் முதல்வர் அவர்களின் பொன்னகவையை முன்னிட்டு, யா/ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மற்றும் தி/மூ/ சம்பூர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் புதிய திருக் கோயில்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

24-08-2025: பூநகரி மருத்துவமனையில் புதிய திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. சென்னை சிவலோகத் திருமடம் திருவாசகப்பித்தர் தவத்திரு. வாதவூரடிகள் சுவாமிகள் மடத்திற்கு வருகை தந்து திருமுறை விண்ணப்ப வழிபாடுகளை ஆற்றினார்.

07-09-2025: மடங்கல் நல்லோரையில் அறுபத்தொன்றாவது (61) இதழ் வெளியீடு.

15-09-2025: சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு யாத்திரை சென்று திரும்பிய அடியார்கள் 18 பேருக்கு மடத்தில் திருவமுது செய்விக்கப்பட்டது.

20-09-2025: தமிழ்நாடு கந்தர்வகோட்டை கயிலை அறக்கட்டளை நிறுவுனர் முனைவர் சிவத்திரு. இரா. துரைசாமி தலைமையில் திருமுறை விண்ணப்ப வழிபாடுகள் நடைபெற்றன.

06-10-2025: கன்னி நல்லோரையில் அறுபத் திரண்டாவது (62) இதழ் வெளியீடு.

14-10-2025: தமிழ்நாடு சேலம் அறுபத்துமூவர் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த 54 அடியார்கள் வருகை தந்து பூவும் நீரும் இட்டு வழிபாடாற்றினர்.

27-10-2025 முதல் 04-11-2025 வரை (பெரியபுராண முற்றோதல்): ஒன்பது நாட்கள் பெரியபுராண முற்றோதல் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று அடியார்களுக்கு அமுது செய்விக்கப்பட்டது. நிறைவு நாளன்று திருமூலர் குருபூசையும் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் மீ. சிவசண்முகம் ஐயா, சைவப்புலவர் சி. கா. கமலநாதன் ஐயா மற்றும் ஓதுவார்கள் கலந்து கொண்டனர்.

05-11-2025: துலை நல்லோரையில் அறுபத்து மூன்றாவது (63) இதழ் நிறைமதி அன்னக்காப்பு வழிபாட்டுடன் வெளியானது.

குறிப்பு: இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தப் பேரிடர் காரணமாக, 04-12-2025 அன்று வெளியாக வேண்டிய கார்த்திகைத் திங்கள் (64ஆவது) இதழ் வெளியாகவில்லை.

06-11-2025, 07-11-2025: வட்டுக்கோட்டை இந்துக் கல்லூ ரியில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு ஆனிலையப்பர் திருக்கோயில் குடமுழுக்கு வழிபாடுகளை அருட்குருநாதர் தவத்திரு. ந. ஒளியரசு ஐயா ஆற்றி வைத்தார். தொடர்ந்து ஒளியரசு ஐயாவினால் 9 பேருக்குச் சமய தீக்கையும், இருவருக்குச் சிறப்புத் தீக்கையும் வழங்கப்பட்டுச் சான்றிதழ்கள்



அளிக்கப்பட்டன.

2026ஆம் ஆண்டு நிகழ்வுகள் (ஆறாம் ஆண்டு நிறைவுச் சங்கு நீராட்டு வரை)

02-01-2026, 03-01-2026: நடராசப் பெருமானுக்குத் திருப்பொற்சுண்ணம் இடித்து ஆதிரைத் திருமஞ்சன வழிபாடுகளும், திருவீதியுலாவும், ஆதிரை அருட்காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. திருவாதிரை நன்னாளில் அறுபத்தைந்தாவது (65) இதழ் வெளியிடப்பட்டது.

30-01-2026: வவுனியா பல்கலைக்கழக பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ்நாட்டு முனைவர் ஞானஜோதி அம்மையார் குழுவினர் மடத்தில் வழிபாடாற்றினர்.

01-02-2026: சுறவம் நல்லோரையில் தைப்பூச நன்னாளில் அறுபத்தாறாவது (66) இதழ் வெளியீடு.

14-01-2026: ஒசுத்திரேலியா அறம் அறக்கட்டளையுடன் இணைந்து 'பொங்குவோம் பொங்க வைப்போம்' திட்டத்தின் கீழ் கட்புலனற்றோர் சங்கத்தைச் சேர்ந்த 40 பேருக்குப் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. 15, 16 தேதிகளில் தைப் பொங்கல் மற்றும் கோசாலை பட்டிப் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன.

11-02-2026: சம்பூர் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமையப்பெற்ற மங்களநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவைச் செந்தமிழ் அர்ச்சகர் சிவத்திரு. அருளானந்தம் சனுசன் ஐயா ஆற்றி வைத்தார். அன்றைய தினத்தில் தமிழ்நாட்டிலிருந்து கோவை குணசீலன் ஐயாவும் மடத்திற்கு வருகை தந்திருந்தார்.

13-02-2026, 14-02-2026: வடமாகாணத்தில் 12 பாடசாலைகளுக்கும், கிழக்கு மாகாணத்தில் 20 அறநெறிப் பாடசாலைகளுக்கும் சிவனிரவுப் பூசைப் பொருட்கள் மற்றும் போட்டிகளுக்கான நிதியுதவிகள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டன.

15-02-2026 (பெருஞ்சிவனிரவு - 2026): நான்கு சாமமும் நால்வகைத் திரவியங்கள் மற்றும் நால்வகை இசையுடன் ஐம்பூதநாதருக்குச் சிறப்பு வழிபாடுகளும், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

02-03-2026: கும்பம் நல்லோரையில் மாசிமக நன்னாளில் அறுபத்தேழாவது (67) இதழ் வெளியீடு.

29-03-2026 (சிறப்புப் பதிக முற்றோதல் வேள்வி): யோகர் சுவாமிகளின் குருபூசை நன்னாளில், சைவநீதி உலகெலாம் விளங்கவும், இலங்கையில் சைவ ஆதீன மரபுகள் தழைத்து நல்லை ஆதீனத்தில் மூன்றாவது சந்நிதானங்கள் ஆட்சிபீடம் ஏறவும், சைவ அமைப்புகள் ஒற்றுமையாக இயங்கவும் வேண்டி, இடர்களையும் திருப்பதிகங்கள் முற்றோதல் வேள்வி சிறப்பாக நடைபெற்றது.

01-04-2026: மீனம் நல்லோரையில் பங்குனி உத்தர நன்னாளில் அறுபத்தெட்டாவது (68) இதழ் வெளியீடு.

06-04-2026 (தருமபுர ஆதீன குருமகா சந்நிதானம் வருகை): தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கையிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் எழுந்தருளி அடியார் பெருமக்களுக்குத் திருவருள் பாலித்து அருளாசி வழங்கியமை வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

14-04-2026: தென்னாடு முதல்வர் அவர்களின் இல்லத்திற்கு, சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் எழுந்தருளி அருளாசி வழங்கியிருந்தார்கள்.

(01-05-2026): சித்திரை நிறைமதியும் 69வது இதழ் வெளியீடும் (01-05-2026)

மேழ நல்லோரையில் சித்திரை நிறைமதி நன்னாளில் மடத்தின் அறுபத்தொன்பதாவது (69) திங்கள் செய்தியிதழ் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிறைவுரை: ஆறாம் ஆண்டு நிறைவுச் சங்கு நீராட்டு (29-05-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் ஆரம்பிக்கப்பட்டு, அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், வைகாசித் திங்கள் பதினைந்தாம் நாள் (29-05-2026 வெள்ளிக்கிழமை) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு ஆறாம் ஆண்டு நிறைவுச் சங்கு நீராட்டு வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இறையருளோடு நடைபெற்றன. இவ்வழிபாட்டுக் கிரியைகளைச் செந்தமிழ் அருச்சுனைஞர் சிவத்திரு. உயிரொளிசிவம் பிரதாபனார் அவர்கள் பத்திப்பூர்வமாக ஆற்றி வைத்தார்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் ஐம்பூதக் கலவையாக எழுந்தருளியுள்ள ஐம்பூதநாதருடன், ஈழத்து சித்தர்கள், பதினெண்சித்தர்கள், நாயன்மார்கள், இராசராச சோழன் என சைவசமயத்தின் அடையாள நாயகர்களும் தவக்கோலமாக எழுந்தருளியுள்ளனர். உலகிலே, ஈழத்து சித்தர்கள் அனைவரிற்கும் ஓரிடமாக கருங்கல் சிற்பங்களாக செதுக்கி எழுந்தருள வைத்திருப்பது இதுவே முதலாவதாகும். ஆறாம் ஆண்டில் தடம் பதிக்கும் இச்சிவமடத்தின் செந்தமிழ் ஆகமப் பணிகள் உலகெங்கும் பரவ ஐம்பூதநாதர் அருள்புரிவாராக.

**"அனைவரும் வருக அப்பனின் அருள் பெறுக"**

**திருச்சிற்றம்பலம்**

# கொக்குவில் விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதர் திருக்கோயில் 'பெரிய நந்தி' திருக்குட நன்னீராட்டு வரலாற்றுப் பெருவிழா



## தோற்றுவாயும் ஆலய வரலாறும்

ஈழத்துச் சைவப் பெருநிலத்தின் ஆன்மீக மையமாக விளங்கும் யாழ்ப்பாணத்து மண்ணில், கலைகளும் சமயப் பண்பாடும் தழைத்தோங்கும் கொக்குவில் கிழக்குப் பதியில், அருள்வடிவமாய் எழுந்து நிற்கிறது **"யாழ்விஷன் இந்துமன்றத்தின் அருள்மிகு விசாலாட்சி உடனுறை காசிவிசுவநாதர் திருக்கோயில்"**. இப்பகுதியின் அடியார் பெருமக்களுக்குப் பத்திப் பேற்றினையும் ஆன்மீகச் சேவைகளையும் நல்கும் உயரிய நோக்குடன், சிவத்திரு. கந்தையா சுசீந்திரன் மற்றும் திருமதி. அருணா சுசீந்திரன் குடும்பத்தினரின் இறைசிந்தையின் விளைவால் தோற்றம் பெற்ற யாழ்விஷன் இந்துமன்றம், எம்பெருமானுக்கு ஓர் உன்னதத் திருக்கோயிலை அமைக்கத் திருவுள்ளம் கொண்டது.

அதன்பொருட்டு, 2010 ஆம் ஆண்டு கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையாக தொடங்கப்பட்ட யாழ்விஷன் இந்துமன்றத்தில் முதன்முதலாக கடந்த 10.12.2021 (பிலவ வருடம் கார்த்திகைத் திங்கள் 24 ஆம் நாள்) வெள்ளிக்கிழமை, சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் விசாலாட்சி அம்மை உடனுறை காசிவிசுவநாதப் பெருமானுக்குத் தொடங்குகாலத் திருக்குட நன்னீராட்டு மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 01.11.2021 அன்று அன்பகம் ஆன்மீக நிலையம் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டு, இவ்வூர் மக்களின் வழிபாட்டுப் புகலிடமாகவும், ஆன்மீகச் சேவைகளின் மையமாகவும் இத்திருத்தலம் விளங்கி வருகின்றது.

## கற்கோயில் திருப்பணிகளும் மகாலிங்க வழிபாட்டு மகிமையும்

ஆரம்பிக்கப்பட்ட சில வருடங்களிலேயே இத்திருத்தலத்தைக் காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கும் ஒரு கற்கோயிலாக (கருங்கல் திருத்தலமாக) மாற்றும் மாபெரும் திருப்பணி தொடங்கப்பட்டது.

முழுமையான கருங்கல் வடிவமைப்பு (2024): இத்திருக்கோயிலானது முழுமையாகக் கருங்கல்லால் புத்தெழில் கோலத்தில் வடிவமைக்கப்பட்டது. ஆலயத்தின் இராசகோபுரம், நடராசர் அலங்கார மண்டபம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கான பெருந் திருக்குட நன்னீராட்டு (மஹா கும்பாபிசேகம்) கடந்த 24.03.2024 (சோபகிருது வருடம் பங்குனித் திங்கள் 11 ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை மிக விமரிசையாக நடைபெற்றது. இக்கோயிலின் விசேட அம்சமாக, இலங்கையில் முதன்முறையாக 108 சிவதாண்டவப் பாவனைகளைத் தாங்கிய பேரெழில் கருங்கல் அலங்காரத் தூண்களின் வரிசை அமையப் பெற்றுள்ளமை அடியார்களை வியப்பில் ஆழ்த்துகிறது. மேலும், இக்கோயிலுக்கான மூலமூர்த்திகளின் பளிங்குக்கல் இறைத்திருமேனிகள் அனைத்தும் மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அடியார் கரங்களால் நீராட்டும் மகாலிங்கம் (2025): ஆலயத்தின் இறைமகிமையை மேலும் உயர்த்தும் வண்ணம், கடந்த 2025 ஆம் ஆண்டு பெருஞ்சிவனிரவு (மகா சிவராத்திரி) நன்னாளில், அடியார் பெருமக்கள் தங்களின் சொந்தத் திருக்கரங்களினால் நீர் ஊற்றி வழிபாடாற்றக் கூடிய வகையில் ஒரு **"மகாலிங்கத் திருமேனி"** நிலைப்படுத்தல் செய்யப்பட்டு திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டது. திருதேர் வடிவில் பேரெழிலோடு விளங்கும் கருங்கல் நாற்தூண் மண்டபத்தில் இந்த இலிங்கத் திருமேனி நிலைப்படுத்தப்பட்டுள்ளது. சாதி, மத, வயது பேதமின்றி சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் எம்பெருமானைத் தங்கள் கரங்களால் திருமஞ்சனம் (அபிசேகம்) செய்து பேறுபெறும் உன்னத வழிபாட்டு முறை இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## "பெரிய நந்தியின்" சிறப்பும் கருங்கல் நுழைவாயில் தோற்றமும்

சைவ நெறியில் நந்தியெம்பெருமான் வெறும் வாகனமல்ல் அவர் சிவகணங்களின் தலைவர், முதல் குரு, மற்றும் தூ ய ஆன்மாவின் குறியீடு. **"நந்தி அனுமதியின்றி நல்நகர் புகலாகாது"** என்ற வாக்கின்படி, எம்பெருமானை வணங்கும் முன் நந்தியின் திருவருளைப் பெறுவது மரபு. நினைத்தாலே முத்தி தரும் திருவண்ணாமலையில் **"பெரிய நந்தி"** என்ற திருப்பெயரில் நந்தியெம்பெருமான் பிரம்மாண்டமாக வீற்றிருந்து அருள்வதைப் போல, கொக்குவில் பதியிலும் **"பெரிய நந்தி"** என்ற திருப்பெயரிலேயே இத்திருமேனி அமையப் பெற்றுள்ளது இதன் ஆகச்சிறந்த தனித்துவமாகும்.

சிற்பச் சிறப்பு: இவ்வியத்தகு பெரிய நந்திப் பெருமானின்



திருப்பணிகளுக்குக் கடந்த 12.07.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து, 25,000 தொன் எடையுள்ள ஒரே பாறைக் கல்லானது கோவிற்குளம் கோயில்மலையில் 15 அடி ஆழத்தில் தோண்டி எடுத்து கொண்டுவரப்பட்டு, 18,000 தொன் எடையோடு, 7 அடி 5 அங்குலம் உயரமும் 4 அடி 1 அங்குலம் அகலமும் 9 அடி 1 அங்குலம் கொண்டதாக நந்தியெம்பெருமான் வடிவமைக்கப்பட்டு, கடந்த 25.05.2026 அன்று ஆலய முன்றலில் நிலைப்படுத்தப்பட்டார். இக்கருங்கல் திருப்பணிகள் அனைத்தும் சித்தி விநாயகர் சிற்பாலய சிற்பாசாரியார்கள் ரவி மற்றும் நீலராஜ் குழுவினரின் முனைப்பான செயல்திறனால் செவ்வெனே நிறைவேறியுள்ளது. மேலும், இங்கு புத்தெழில் கோலத்தில் அமையப்பெற்ற 20 அடி உயரமான மகரபட்சி அமைப்புடைய, கருங்கல்லாலான தோரண வாசல் நுழைவாயிலும் சிறப்புக்குரியதாகும்.

### பெரிய நந்தி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்புகள்

வரலாற்றுப் பெருமைமிக்க 'பெரிய நந்தி' பெருமானுக்கான திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கடந்த 25.06.2026 அன்று மிக விமரிசையாக நடைபெற்று நிறைவுபெற்றது. முன்னதாக, 24-06-2026 புதன்கிழமை காலை 09:00 மணியளவில் ஆரம்பக் கிரியைகளுடன் யாகசாலைப் பூசைகள் தொடங்கின் அன்று பகல் 12:00 மணி முதல் இரவு 07:00 மணி வரை அடியார்கள் பத்திப் பெருக்குடன் இறைமேனிகளுக்கு எண்ணெய் சாத்தும் எண்ணெய்க்காப்புத் திருவிழா இடம்பெற்றது. தொடர்ந்து, 25-06-2026 வியாழக்கிழமை (மங்கள பராபவ வருடம் ஆனி 11 ஆம் நாள்) ஏகாதசி திதியும், சித்தயோகமும், சுவாதி நட்சத்திரமும் நிறைந்த நன்நாளில், 19 அடி 2 அங்குலம் அகலமும், 24 அடி 2 அங்குலம் நீளமும், 18 அடி உயரமும் கொண்ட பிரம்மாண்ட கருங்கல் கொடுங்க மண்டபத்தில் எழுந்தருளியுள்ள "பெரிய நந்தி" பெருமானுக்குக் காலை 07:28 மணிக்கு விசேட யாகங்களும் வசந்தமண்டபப் பூசைகளும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, இறையருள் கூடிய நல்வேளையில் காலை 09:47 மணிக்குக் கருங்கல்லிலான பெரிய நந்திப் பெருமானுக்குச் சிறப்புத் திருமஞ்சனங்கள் இடம்பெற்றதோடு, மூத்த விநாயகர் (செல்வ கணபதி), கலைமகள் (கலைவாணி தேவி) ஆகிய மூர்த்திகளுக்கும் பெருந் திருக்குட நன்னீராட்டு அதியுன்னத முறையில் நிறைவேறியது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடனும், தருமபுர ஆதீன குருமகா சந்நிதானத்தின் திருவருள் ஆசியுடனும் நடைபெற்ற இவ்விழாவில், தருமபுர ஆதீனக் கட்டளை விசாரணை முனைவர் சீர்வளர்சீர் மௌன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் மற்றும் அருள்மிகு சுந்தர ஆஞ்சநேயர் திருக்கோயில் ஆதீன கர்த்தா சிவசீர் சுந்தரேஸ்வர குருக்கள் ஆகியோர் நேரில் கலந்து சிறப்பித்தனர். இக்குடமுழுக்கினைப் பிரதிஷ்டா பிரதம குரு **"சிவகாம கிரியா கீர்த்தி"** சிவசீர் மணி செந்தில்நாத ரிஷாந்த குருக்கள் (ஸ்தானிக குரு, சூறாவத்தை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்) தலைமையேற்று நடத்த, ஆலயத் தலைமைக் குரு சிவத்திரு செ. குகேஸ்வர சர்மா மற்றும் உதவிக் குரு சிவத்திரு சயந்தன் சர்மா ஆகியோர் கிரியைகளைச் செவ்வெனே நிறைவேற்றினர். விழாவின் சிறப்பம்சமாக, தென்னிந்தியப் பிரபல கர்நாடக இசைக்கலைஞர் ஸ்ரீமதி மதுமிதா அவர்களின் பத்தி இசைக்கச்சேரி அடியார்களை பத்தி வெள்ளத்தில் திளைக்க வைத்ததுடன், பெருமளவிலான அமுது செய்வித்தலோடு (அன்ன தானம்) விழா இனிதே நிறைவுற்றது.



ஈழத்துச் சைவ வரலாற்றில் கருங்கல்லால் மிகப் பெரிய அளவில் அமையப்பெற்று, அடியார்களே திருமஞ்சனம் செய்யும் மகா லிங்கத்தையும், திசை நோக்கிப் பாயும் 18,000 தொன் எடையுள்ள **"பெரிய நந்தி"** பெருமானையும் கொண்ட ஒரு தலம் உருவானது இதுவே முதல்முறையாகும். கொக்குவில் கிழக்கு யாழ்விஷன் இந்துமன்றத்தின் இந்த உன்னத ஆன்மீகப் பணி என்றும் போற்றத்தக்கது. நடைபெற்று முடிந்த இப்புனித நன்னீராட்டுப் பெருவிழாவில் உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டு, அன்னை விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதரின் திருவருளையும், பெரிய நந்திப் பெருமானின் அருட்காவலையும் பெற்றுய்ந்தமை இப்பதிக்குக் கிடைத்த அதியுன்னத பாக்கியமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு: சிவத்திரு தென்னாடு நிலவன்**

# திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப்பயிற்சி மையங்கள் இலங்கையில் பன்னிரண்டு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன







திருவாவடுதுறை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாணைப்படி, ஈழத்தில் பட்டிதொட்டியெங்கும் திருமுறைகள் பரவும் நோக்கில் **“திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையம்”** நிறுவப்பட்டுள்ளது. இதன் இலங்கை ஒருங்கிணைப்பாளராகச் சைவப்புலவர் இரா. ஜீவன்பிரசான் நியமிக்கப்பட்டு, அவரது நெறிப்படுத்தலில் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

இம்மையங்களைத் தொடங்கிவைக்கத் திருவாவடுதுறை ஆதீனத் திருவிடைமருதூர் கட்டளை விசாரணை சீர்வளசீர் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள், மைய இயக்குநர் திருவாளர் சபா சண்முகசுந்தரம், கள்ளக்குறிச்சி சைவசித்தாந்த பேரவை நிறுவனர் திருவாளர் கு. தமிழழகன் ஆகியோர் 04.06.2026 அன்று இலங்கை எழுந்தருளினர். அவர்கள் கொக்குவில் **“தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில்“** தங்கியிருந்து வழிபாடுகள் ஆற்றியதுடன், முதற்கட்டமாக மாத்தளை, கந்தேநுவர, கொக்குவில், யாழ்ப்பாணம், வடலியடைப்பு, கல்விளான், விழிச்சிட்டி, ஓட்டன்குளம், கிளிநொச்சி, மானிப்பாய், சுழிபுரம், இணுவில் ஆகிய இடங்களில் கிளைகளைத் தொடங்கி வைத்தனர்.

இக்கிளைகளில் **“திருமுறைச்செல்வர் பட்டயக் கற்கைநெறி”** ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 16 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள எவரும் இலவசமாக இணையலாம். இக்கற்கைநெறியில் இணைய விரும்பும் சைவப் பெருமக்கள் 0764725386 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# தென்னாட்டு நிகழ்வுகள்



அருளம்பலம் சுவாமிகளின் குருபூசை (23-06-2026)



மாணிக்கவாசகர் குருபூசை (20-06-2026)



சம்பந்தர் குருபூசை (02-06-2026)



திருவாவடுதுறை ‘ஆதீன சைவ சித்தாந்தரத்தினம்’ பட்டக் கற்கைநெறி மாணவர்கள் உடன் சந்திப்பு (04-06-2026)

# தென்னாட்டு நிகழ்வுகள்








வைகாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (30-05-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து ஒன்றாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 15ம் நாள் நிறைமதி அன்று (29-06-2026 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org